விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 32 வெள்ளிக்கிழமை (16.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 209




### தமிழ்த் தேசிய பிரச்சினை தொடர்பாக


# இலங்கை வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்

### அமெரிக்க தூதுவரிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

தமிழ்த் தேசிய பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக இலங்கை தமக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என அமெரிக்கத் தூதுவரிடம் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)



### கோவிட் தொற்றால்

## யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்போதனாவைத் தியசாலையில் சிகிச்சை 19

## பளையில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஏ9 வீதியில் பளை பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. 19

## கொரோனா +1,447

(கொழும்பு)


நாட்டில்நேற்று மேலும் 1,447 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 19

### உலகளாவியரீதியில் ஆபத்து வாய்ந்த

# ‘டெல்டா’ திரிபு வைரஸ்

# யாழ்., கிளிநொச்சிக்கு பரவியது

### அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

உலகளவில் அதிக ஆபத்து வாய்ந்தது என்று கருதப்படும் திரிபு வைரஸான ‘டெல்டா’ யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளைச் சேர்ந்த நபர்களுக்கும் பரவியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஹேமந்த ஹேரத் வெளியிட்டுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட பிசிஆர் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவரின் கருத்தின் அடிப்படையில், 19

## யாழில் இன்று கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பஸ் நிலையம் முன்பாக இன்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொது செயலாளர் ஜோசப் 19

## தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எதிர்காலத்தில் முதன்மைப்படுத்தப்படும்

### கூட்டமைப்பிடம் அமெரிக்கத் தூதுவர் உறுதி

(கொழும்பு)

இலங்கையுடனான செயற்பாடுகளின்போது, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தை இனிவரும் காலங்களில் முதன்மைப்படுத்தி செயற்படவிருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் அலைனா பி டெப்லிட்ஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவிற்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது. 19

## முல்லை புளியங்குளத்தில் மோ.சைக்கிள் விபத்து

### இளைஞன் பலி



(முல்லைத்தீவு)

வீதிக்கு குறுக்கே சடுதியாக பயணித்த எருமைமாட்டுடன் மோட்டார்சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். 19

## பருத்தித்துறை நகரம் முற்றாக முடக்கம்

### இ.போ.ச சாலையிலிருந்து பஸ் சேவைகள் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகர் உள்ளிட்ட பகுதிகள் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நேற்று அதிகாலை முதல் முடக்கப்பட்டுள்ளன. 19

### கொரோனாவால்

## இலங்கையில் மேலும் 50 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 50 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று குறித்த அறிவிப்பை வெளியிட் 19

### வல்வெட்டித்துறையில்

## 40 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் நேற்று மேலும் 40 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
27.06.1935

இறப்பு
16.06.2021

அமரர்

## சிவப்பிரகாசம் புவனேஸ்வரி

(நாவற்கண்டி, காரைநகர்)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.

கணேசமூர்த்தி
குடும்பத்தினர்

(C-2360)


## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (7223)

☎-070 640 5951
e-mail : engchelvam@gmail.com

## விற்பனைக்குண்டு

சணல் கிடாய் 1 வயது - ரூபாய் 50,000/=
ஜேசி கலப்பின பசு 1ஆம் ஈற்று 06 மாத நாம்பன் கன்றுடன் - ரூபாய் 95,000/=
மற்றும் ஊர்த் தேங்காய்கள் ரூபாய் 50/=, ரூபாய் 55/= பருமனுக்கு தக்க விலையுடன். (7237)

077 571 6437

## சித்த ஆயுர்வேத நிபுணர்களின் ஆலோசனையும் சிகிச்சையும்

யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக சித்த ஆயுர்வேத நிபுணர்களின் ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகளை மக்களுக்கு வழங்கவிருக்கின்றோம்.

**மருத்துவ சேவை விபரங்கள்**

**திங்கள் - சித்த ஆயுர்வேத அறுவை மருத்துவமும் வர்ம சிகிச்சையும்**
(முள்ளந்தண்டுப் பிரச்சினை, மூட்டுக்களில் ஏற்பட்ட பாதிப்பு, முழங்கால் நடக்க முடியாமை, முறிவு நெரிவு, பிஸ்ரியலா, மாறாத புண்கள், சிறுநீரக கற்கள், மூல வியாதிகள், வரிக்கோஸ் புடைப்புக்கள், இதய அடைப்பு)

**புதன், வெள்ளி - பொது மருத்துவம்**
நீரிழிவு, சர்ம நோய்கள், வயிற்றுப் புண், வாதரோகம், பாரிசவாதம், நாட்பட்ட இருமல், அஸ்மா, மூலரோகம் போன்ற பொது நோய்கள்.

**வியாழன்**
காயகல்ப சிகிச்சையும் உணவும் போசனையும் - கண் பார்வைக் குறைபாடு, கண் மங்கலடைதல், கிட்டப்பார்வை, தூரப்பார்வை குறைபாடு. கண் எரிச்சல், விந்துற்பத்தி குறைபாடு, சினைமுட்டை உற்பத்தி குறைபாடு பாதிப்பு, PCOS, ஞாபக சக்தியின்மை, இளமையில் முதுமை ஏற்படல், நோயெதிர்ப்பு சக்தியை கூட்டல், காதுகளில் ஏற்படும் குறைபாடுகள், பற்களின் ஈறாட்டம், மூக்கடைப்பு, பீனிசம், தலையிடி, ஈரலில் கொழுப்பு படிந்திருத்தல், சமிபாட்டில் உள்ள பிரச்சினைகள், தலைமுடி கொட்டல், இளநரை, போசாக்கின்மை குறைபாடுகள்.

ஆயுர்வேத சத்திரசிகிச்சை, வர்ம நிபுணர் **Dr. G.Sritharan**
BSMS (Jaf.) M.Phil (Jaf), PGDAS (Kelany), Ad. Dip.In Human Exe & Yoga (Aliyaru) & Phd (India)
உணவும் போசனை மருத்துவ நிபுணர் **Dr.T.Theleepan** BSMS (Jaf.), M.Sc (Pera)
பொது மருத்துவ நிபுணர்கள் **Dr.Anpuchelvy Sritharan** BSMS (Jaf.) M.D (India),
**Dr.V.Jegatheeswaran** BSMS (Jaf.) M.D (India)

இடம் : ஆயுர்வேத வைத்தியசாலை கைதடிக்கு முன்பாக உள்ள கனி மெடி கிளினிக்கில் நடைபெறவுள்ளது.
நேரம் : பி.ப 4-6 மணி ஆயுர்வேத சத்திரசிகிச்சை பி.ப 2-4 மணி.
முற்பதிவு அவசியம்.
தொடர்புகளுக்கு : நிர்வாக இயக்குனர். 077 438 2374, 077 926 8850

(7236)


# மரண அறிவித்தல்

திருமதி

## இரத்தினேஸ்வரி இராசேந்திரா

**தோற்றம் : 26.03.1950 மறைவு : 15.07.2021**



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கல்லைவேம்படி சுழிபுரம், வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினேஸ்வரி இராசேந்திரா நேற்று (15.07.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு - விசாலாட்சி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி நடராசா (சங்கரத்தை, வட்டுக்கோட்டை) தம்பதியரின் அன்பு மருமகளும் திரு. இராசேந்திராவின் ( இளைப்பாறிய தொழில்நுட்ப உதவியாளர் - நீர்ப்பாசனத் திணைக்களம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற குணசிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வைத்திய கலாநிதி சுரேந்திரகுமாரன் (சமுதாய வைத்திய நிபுணர், சிரேஷ்ட விரிவுரையாளர் - மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), செந்தில்குமரன் (மேற்பார்வை உத்தியோகத்தர் - Built Company), சுஜாதா, மீரா (பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், காரைநகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரேணுகா (நிர்வாக உத்தியோகத்தர் - IMS), சுதர்சன் (விக்னேஸ்வராக் கல்லூரி - கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிநவன், அப்சரா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (16.07.2021) வெள்ளிக்கிழமை கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (7241)

இல. 10A,
வைமன் வீதி,
நல்லூர்.

தகவல்:
வைத்தியர் இ. சுரேந்திரகுமாரன் - 077 744 8080
சு. மீரா - 077 388 5233

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned post up to **28.07.2021.**

**Post of Temporary Research Assistants / Temporary Scientific Assistants "Lee Foundation Endowment for Orthopaedic Surgery - Professorial Surgical Unit Faculty of Medicine, University of Jaffna"**

| Post | Salary scale |
|---|---|
| **Temporary Research Assistants** | **Rs.49,860/- (Fixed) pm** |

Qualifications:-

1. Pre intern medical officers :
   Those who have completed the Final MBBS Examination.
   *Selection will be based on the order of Merit list.*

2. Para-Medical or Science based qualified graduates :
   I. A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant field.
   OR
   II. A Second class ( Lower Division) in a Special Degree Examination in the relevant field.
   OR
   III. An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant field.

**AND**

The graduates those who have an excellent track record on under undergraduate research, publications, IT skills, statistical analysis skills, and English Language skills.

| Post | Salary scale |
|---|---|
| **Temporary Scientific Assistants** | **Rs.48,385 / - (fixed) pm** |

Qualifications:-

1. Para-Medical or Science based qualified graduates :
   I. A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant field.
   OR
   II. A Second Class ( Lower Division) in a Special Degree Examination in the relevant field.
   OR
   III. An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant field.
   OR
   IV. An ordinary pass in the B.Sc General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant field.

**Note:** Having an excellent track record on undergraduate research, publications, IT skills, statistical analysis skills, and English Language skills will be given priority.

Perfected applications shall be sent to the **Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.**

Application forms will be available in the University website http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf. Those who wish to send the application forms downloaded from the University website should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs. 100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880**(*Ref number should be mentioned:* 970000090000387) of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs. 100 / - per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self - addressed stamped envelope 23x10 cm in size along with the paid Bank Slip to the above address. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**

(C-2358)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில்லா பிரேரணையை அரசிற்கெதிராக மாற்ற வேண்டும்

## -ரணில்-

**(கொழும்பு)**

**வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையாக மாற்றியமைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் கட்சித் தலைவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று சிறிகொத்தாவில் இடம்பெற்றது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனிநபருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வர எதிர்க்கட்சியினர் எடுத்துள்ள தீர்மானத்தினால் எதிர்த்தரப்பினருக்கு எவ்வித பயனும் ஏற்படாது. மாறாக ஆளும் தரப்பினரே பலமடைவார்கள் என குறிப்பிட்டுள்ளார். (நி-5)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தின் A Block கட்டடத் தொகுதியின் சம்பிரதாயபூர்வ திறப்பு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தொகுதியையும் கணக்கியல் துறை, நிதி முகாமைத்துவத்துறை ஆகியவற்றையும் திறந்து வைத்தார். (படம்:-சிவசாந்தன்)

# வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக பல இடங்கள் திறப்பு

(கொழும்பு)

இலங்கையில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக தற்போது பல இடங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன என இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

புனித பல்லின கோயில், பெரதெனிய தாவரவியல் பூங்கா, யால தேசிய பூங்கா, பின்னவலை யானைகள் சரணாலயம், ஹற்றன் சமவெளி தேசிய பூங்கா, மின்னேரியா தேசிய பூங்கா, மிரிச மற்றும் சிங்கராஜ வனம் ஆகியவை இவ்வாறு திறக்கப்பட்டுள்ளன. வனவிலங்கு பூங்காக்கள் மற்றும் ஏனைய இடங்கள் திறக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து, பார்வையாளர்களுக்காக பல தளங்கள் இப்போது திறக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது. (நி-5)



அமெரிக்கத் தூதுவர் உள்ளிட்ட உயர்மட்ட இராஜதந்திரிகள் நேற்று இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினரை சந்தித்துள்ளனர்.

கூட்டமைப்பின் சார்பில் தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் உட்பட மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சோகம் களைந்தது அவுஸ்திரேலியா

## மே.தீவுகளை வீழ்த்தி வெற்றிப்பாதை

மே.தீவுகளுக்கு எதிரான 4ஆவது 'ரி20' போட்டியில் கடைசி ஓவரில் அசத்திய அவுஸ்திரேலிய அணி 4 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது.

மே.தீவுகள் சென்றுள்ள அஸ்திரேலிய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது.

முதல் மூன்று போட்டிகளில் வெற்றி பெற்ற மே.தீவுகள் அணி 3-0 என, ஏற்கெனவே தொடரை கைப் பற்றியது. 4ஆவது போட்டி செயின்ட் லூசியாவில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு மத்யூ வேட் (5) ஏமாற்றினார். பின் இணைந்த அணித் தலைவர் ஆரோன் பின்ச் (53), மிட்சல் மார்ஷ் (75) அரைசதம் கடந்தனர். அலெக்ஸ் ஹரி (0), மோய்சஸ் ஹென்ரிக்ஸ் (6), அஷ்டன் டேர்னர் (6) நிலைக்கவில்லை.

20 ஓவர்கள் நிறைவில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களை எடுத்தது.

டானியல் கிறிஸ்ரியன் (22), மிட்சல் ஸ்ரார்க் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் மே.தீவுகள் சார்பில் ஹைடன் வோல்ஷ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

சவாலான இலக்கை விரட்டிய மே.தீவுகள் அணிக்கு எவின் லீவிஸ் (31) நல்ல ஆரம்பம் கொடுத்தார். கிறிஸ் ஹெய்ல் (1), ஆன்ட்ரி பிளட்சர் (6), அணித் தலை வர் நிக்கோலஸ் பூரன் (16) ஏமாற்றினர். பொறுப்பாக ஆடிய சிம்மன்ஸ் (72) நம்பிக்கை அளித்தார். பேபியன் ஆலன் (29) ஆறுதல் கொடுத்தார். கடைசி ஓவரில் வெற்றிக்கு 11 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

ஸ்ரார்க் வீசிய 20ஆவது ஓவரின் முதல் 5 பந்தில் ஒரு ஓட்., கூட எடுக்கப்படவில்லை. கடைசி பந்தில் ரசல் சிக்சர் அடித்தார்.

மே.தீவுகள் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 185 ஓட்டங்கள் மட்டும் எடுத்து 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ரசல் (24) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் ஆஸி சார்பில் மிட்சல் மார்ஷ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# அயர்லாந்து 'ஆனந்தம்'

## தென்னாபிரிக்காவை சாய்த்து பெருமிதம்

ஒருநாள் போட்டி அரங்கில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக முதல் வெற்றியை பதிவு செய்தது அயர்லாந்து.

இரண்டாவது போட்டியில் அணித் தலைவர் போல்பிர்னி சதம் விளாசி கைகொடுக்க 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அயர்லாந்து சென்றுள்ள தென்னாபிரிக்க அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி மழையால் பாதியில் ரத்தானது. இரண்டாவது போட்டி டப்ளினில் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

அயர்லாந்து அணிக்கு போல் ஸ்டிர்லிங் (27) சுமாரான ஆரம்பம் அளித்தார். அன்டி மெக்பிரைன் (30) ஆறுதல் கொடுத்தார். அணித் தலைவர் பேல்பிர்னி (102 ஓட்., 117 பந்து, 2 சிக்சர், 10 பவுண்டரி), ஹரி டெக்டர் (79), ஜோர்ஜ் டொக்ரெல் (45) கைகொடுக்க, 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களைக் குவித்தது.

சவாலான இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு ஜேன்மேன் மாலன் (84), வான் டெர் துசென் (49) நம்பிக்கை அளித்தனர். டேவிட் மில்லர் (24), அணித் தலைவர் பாவுமா (10), என தொடர்நது வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேற தென்னாபிரிக்க அணி 48.3 ஓவர்களில் 247 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 43 ஓட்டங்களால் அதிர்ச்சி தோல்வியடைந்தது.

மூன்றாவது போட்டி இன்று டப்ளினில் நடக்கிறது



சகலதுறைகளிலும் ஜொலித்த ஆஸியின் மிட்சல் மார்ஷ்



சதமடித்து அசத்திய அணித் தலைவர் பேல்பிர்னி

# கிண்ணம் வென்றது இங்கிலாந்து

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது 'ரி20' போட்டியில் 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்ற இந்திய அணி ரி20 தொடரைக் கைப் பற்றி • கிண்ணம் வென்றது.

இங்கிலாந்து சென்ற இந்திய பெண்கள் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்றது.



வெற்றிக் கிண்ணத்துடன் மகிழ்ச்சி ஆரவாரத்தில் இங்கிலாந்து பெண்கள்

முதல் இரு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றன.

செம்ஸ்போர்டில் நடந்த மூன்றாவது போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

**மந்தனா ஆறுதல்**

இந்திய அணிக்கு ஷபாலி (0), ஸ்மிருதி மந்தனா ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது. ஹர்லீன் 6 ஓட்டங்கள் எடுக்க, அணித் தலைவர் ஹர்மன்பிரீத் 36, ஸ்னே ரானா 4, ரிச்சா 20 ஓட்டங்கள் எடுத்தனர். மந்தனா அதிகபட்சம் 70 ஓட்டங்கள் எடுத்தார்.

20 ஓவர்களில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களை எடுத்தது.

**டேனியலி கலக்கல்**

இங்கிலாந்து அணிக்கு டாம்மி (11) ஏமாற்ற, சிவர் (42) சற்று உதவினார். டேனியலி வயாத் (89), அணித் தலைவர் ஹெதர் (6) ஆட்டமிழக்காமல் இருந்து அணியை வெற்றிக்கு கொண்டு சென்றனர்.

இங்கிலாந்து அணி 18.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

# சிறந்த வீராங்கனையாக சோபி தேர்வு



சோபி எக்லெஸ்டோன்

ஐ.சி.சி., சார்பில் ஜூன் மாதத்தின் சிறந்த வீராங்கனையாக இங்கிலாந்தின் எக்லெஸ்டோன் தேர்வானார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) சார்பில் ஒவ்வொரு மாதமும் சிறப்பாக செயற்படும் வீரர், வீராங்கனைக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

இதன்படி, கடந்த ஜூன் மாதம் சிறப்பாக செயற்பட்ட 'ரொப்-3' வீராங்கனைகளுக்கான பரிந்துரை பட்டியலில் இந்தியாவின் ஷபாலி வர்மா, ஸ்னே ரானா, இங்கிலாந்தின் சோபி எக்லெஸ்டோன் இடம் பிடித்திருந்தனர். இதில் இங்கிலாந்து 'சுழல்' வீராங்கனை எக்லெஸ்டோன் சிறந்த வீராங்கனையாக தேர்வானார்.

இந்தியாவுக்கு எதிரான பிரிஸ்டல் டெஸ்டில் இரு இன்னிங்ஸிலும் சேர்த்து 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இவர், ஒருநாள் தொடரிலும் 8 விக்கெட்டுக்களைச் சாய்த்திருந்தார்.

இதன்மூலம் இவ்விருதுக்கு தேர்வான 2ஆவது இங்கிலாந்து வீராங்கனையானார். இதற்கு முன், பெப்ரவரி மாதம் இங்கிலாந்தின் டாமி பியுமன்ட் சிறந்த வீராங்கனை விருதுக்கு தேர்வானார்.

சிறந்த வீரருக்கான பரிந்துரை பட்டியலில் நியூசிலாந்தின் கான்வே, கைல் ஜேமிசன், தென்னாபிரிக்காவின் குயின்டன் டி ஹொக் இடம் பிடித்தனர்.

இதில் கான்வே சிறந்த வீரராக தேர்வானார். அறிமுக டெஸ்டில் (எதிர்: இங்கிலாந்து) இரட்டை சதமடித்த இவர், அதன்பின் தொடர்ச்சியாக 2 டெஸ்டில் (எதிர்: இங்கிலாந்து, இந்தியா) அரைச்சதம் கடந்திருந்தார்.

# தஞ்சாவூர் பல்கலையில் நடனத்தில் கலாநிதிப் பட்டம்



(யாழ்ப்பாணம்)

இராமநாதன் நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி அருட்செல்வி கிருபைராஜா தஞ்சாவூர் சாஸ்திரா பல்கலைக் கழகத்தில் கடந்த 9ஆம் திகதி நடனத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார்.

இவர் "ஈழத்துக் கூத்துகள் சாஸ்த்திரியமானவை" எனும் தலைப்பில் கலாநிதி பத்மா சுப்பிரமணியத்தின் நெறியாள்கையில் ஆய்வுசெய்து தஞ்சாவூர் சாஸ்த்திரா பல்கலைக்கழகத்தில் பரதநாட்டிய கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned post up to 28.07.2021.

**Post of Temporary Research Assistants**
**"A.S.Thambiah Endowment Chair in Oncology - Faculty of Medicine,University of Jaffna"**

| Post | Salary scale |
| --- | --- |
| **Temporary Research Assistants** | **Rs.49,860/- (Fixed) p.m** |

**Qualification-**

1. Should have the basic degree in the field of health care and havingUndergraduate research experience in health research.

I. A First or Second class (Upper Division) in a basic degree Examination in the relevant subject.
OR
II. A Second class ( Lower Division) in a basic degree Examination in the relevant subject.
OR
III. An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant subject.
OR
IV. An ordinary pass in the B.Sc General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant subject

***Note :Having research experience in the field of oncology will be preferable.***

Perfected applications shall be sent to the **Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.**

Application forms will be available in the Faculty website http://www.med.ifn.ac.lk/wp-content/uploads/ 2021/01/ APPLICATION-Form.pdf.Those who wish to send the application forms downloaded from the Faculty website should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs. 100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880**(Ref number should be mentioned: 970000090000387) of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs. 100 / - per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self - addressed stamped envelope 23x10 cm in size along with the paid Bank Slip to the above address.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**

(c-2359)


# சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டிய தேவையில்லை

## ரணிலின் கருத்துக்கள் அடிப்படை அற்றவை என்கின்றார் கப்ரால்

(கொழும்பு)

நாட்டின் தேசிய பொருளாதார நிலைமைகள் மற்றும் அந்நியசெலாவணி துறை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடும் கருத்துக்கள் அடிப்படையற்றவை.

பொருளாதார நிலைமையினை சீர் செய்வதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட வேண்டிய தேவை கிடையாது என நிதி மூலதனச் சந்தை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை பெற்றுக் கொண்டுள்ள அரச முறை கடன்களை மீளச் செலுத்துவதில் எவ்வித நெருக்கடி நிலைமையும் ஏற்படாது. 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிலிருந்து அரச முறை கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தியுள்ளோம். எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய கடன்களை முறையாகச் செலுத்துவதற்கு உரிய திட்டங்கள் அனைத்து துறைகளையும் அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ளன.

நாட்டின் தேசிய பொருளாதார நிலைமை மற்றும் அந்நியசெலாவணி துறை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடும் கருத்துக்கள் முற்றிலும் அடிப்படையற்றவை. சுற்றுலா பிரயாணிகளின் வருகை, வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல், ஏற்றுமதி நிலைமைகள் ஆகிய காரணிகள் அந்நிய செலாவணி துறையில் பிரதான பங்கு வகிக்கின்றன என அவர் தெரிவித்தார். (நி-5)

# மட்டக்களப்பில் மின்சாரம் தாக்கி 6 வயது சிறுவன் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு , சின்ன ஊறணி பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி 6 வயது சிறுவன் ஒருவர், உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாம் வசித்து வந்த வீட்டில் புனரமைப்புப் பணிகள் இடம்பெறுவதால் குறித்த சிறுவன், தாய் மற்றும் சகோதரிகள் இருவருமாக அருகிலுள்ள உறவினர் வீட்டில் தற்காலிகமாக வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையில். புனரமைக்கப்படும் வீட்டில் மின் இணைப்பு பணிகள் இடம் பெற்று வந்திருந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் அவ்வீட்டுக்கு சென்ற சிறுவன் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

சிறுவன் அசைவற்று விழுந்து கிடப்பதை அவதானித்த உறவினர்கள், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அவரைக் கொண்டு சென்றுள்ளனர். எனினும் அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு முன்னதாகவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சிறுவனின் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5)

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு நிபந்தனையுடன் அனுமதி

(கொழும்பு)

கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ள நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது. இதற்கமைய, நாட்டிற்குள் வந்த பின்னர் முதலாவது தினத்தில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்று உறுதியாகவில்லையாயின் அவர்கள் இலங்கையின் எந்தப் பாகத்திற்கும் சுற்றுலா செல்ல அனுமதி வழங்கப்படும் என சுற்றுலா அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதேநேரம், சுற்றுலா மேற்கொண்டுள்ள 7 ஆவது தினத்தில், சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை நிலையத்தில் அவர்கள் மீண்டும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன், அனைத்து சுற்றுலாப் பயணிகளும் இலங்கை வருவதற்காக விமானத்தில் பயணிப்பதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் மேற்கொண்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்று உறுதியாகவில்லை என்பதற்கான ஆவணத்தையும் வைத்திருக்க வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி-5)


# கண்ணீர் அஞ்சலி



அமரர்.
செல்லையா லோகநாதன்
தோற்றம்-1958.10.28 மறைவு- 2021.05.30

கிளி/பளை மத்திய கல்லூரியில் கல்வி கற்பிக்கும் திருமதி **லோகனவனிதா** ஆசிரியையினுடைய அன்புச் சகோதரர்கள் காலமானார்கள். அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(7228)



அமரர்.
செல்லையா இரத்தினகுமார்
தோற்றம்-1954.12.10 மறைவு- 2021.06.16

ஆசிரியர் நலன்புரிச் சங்கம், கிளி/பளை மத்திய கல்லூரி.


# ஆரியகுளம் பகுதியை அழகுபடுத்தும் திட்டம்

(குப்பிழான்)

யாழ்.நகரில் அமைந்துள்ள ஆரியகுளம் பகுதியை அழகுபடுத்தும் வேலைத் திட்டத்திற்கு அமைய யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் நேற்று வியாழக்கிழமை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்று மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை [illegible] தார்.

(7-8-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிகோவிலடி பகுதி தனிமைப்படுத்தலில்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி பகுதி தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் கடந்த இரண்டு நாட்களில் 48 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறிப்பட்டது.

அதனையடுத்து பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியினால் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளருக்கும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை வடமேற்கு (J/388) கிராம உத்தியோகத்தர் பிரிவே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளது. அந்தக் கிராமத்தில் 310 குடும்பங்களைச் சேர்ந்த 940 பேர் வசிக்கின்றனர்.

இதேவேளை, பருத்தித்துறை முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் குறுக்குத் தெருக்களிலும் சில பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன. (7-8-33)

# சித்த மருத்துவமனை கொடிகாமத்தில் திறப்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் சித்த மருத்துவமனை வளாகத்திற்குள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்த விசேட சிகிச்சை மையம் நேற்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட குறித்த விசேட சிகிச்சை மையத்தினை வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் திறந்து வைத்திருந்தார்.

புதிதாக திறந்து வைக்கப்பட்ட சிகிச்சை மையத்தில் பொது மருத்துவச் சிகிச்சை, சித்த அறுவைச் சிகிச்சை, குழந்தை மருத்துவம், மகளிர் மருத்துவம், யோகா சிகிச்சை, ஜோதிட சிகிச்சை மற்றும் வர்ம சிகிச்சை ஆகிய சிகிச்சைகள் இடம்பெறவுள்ளன. அதற்காக இந்தியா சென்று பயின்ற விசேட மருத்துவர்களும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-8-30-18)



சாவகச்சேரி பிரதேச சபையின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் சுதந்திரக்கட்சி உறுப்பினர்களின் ஒதுக்கீட்டில் சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முதற்கட்டமாக 50 தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

(படம்:- சுபேசன்)

# பாடசாலை சமூகத்தவர்களுக்கு 72% தடுப்பூசி செலுத்தப்பட்டது

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை சார்ந்த 7 ஆயிரத்து 432 பேர் கொரோனாவுக்கான சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பாடசாலைகளை மீளவும் ஆரம்பிக்கும் வகையில் ஆசிரியர், அதிபர் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு நாடு முழுவதுமாக தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த வாரம் முதல் இரண்டாம் கட்டத்துக்கான முதல் டோஸ் தடுப்பூசியை யாழ்ப்பாண மாவட்டத்தில் 51 ஆயிரத்து 390 பேர் இதுவரை பெற்றுக்கொண்டனர். (7-8-33)


# மின்னியலாளர்களுக்கான விசேட அடையாள அட்டை

(பனிக்கன்குளம்)


தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுசரணையுடன் முற்றிலும் இலவச அடிப்படையில் நாட்டிலுள்ள மின்னியலாளர்களுக்கான (Electrician) தேசிய தொழில் தகைமை சான்றிதழை (NVQ) வழங்கி அதனூடாக விசேட அடையாள அட்டையினை பெற்றுக்கொடுக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்துள்ளது

விண்ணப்பங்களை முள்ளியவளையிலுள்ள மாவட்ட அலுவலகத்தில் பெற்று ஒன்றரை (1 1/2) வருடத்திற்கு குறையாத தொழில் அனுபவத்தை கிராம உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்துவதன் மூலம் மதிப்பீட்டிற்கு தகுதி பெறுவீர்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு உரிய பிரதேச உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்ளுமாறும் எதிர்வரும் 20.07. 2021 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (7-8-281)



பாதுகாப்புப் படைத் தலைமையகம் (யாழ்ப்பாணம்), 52 ஆவது தரைப் படைத் தலைமையகம் மற்றும் 521 ஆவது காலாட்படைப் பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்ற வயாவிளான் தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த சவுதி அரேபியா, கட்டார், குவைத், சைபிரஸ் மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்த 67 பேர் நேற்றைய தினம் இரண்டு வாரங்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து தத்தமது வீடுகளிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



சௌபாக்கியா உற்பத்திக் கிராம களஞ்சிய சாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பெரியமடு கிராமத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

(படம்:- ஜோசப் நயன்)



வீட்டுக்கு வீடு தென்னை மரம் "கப்ருக" 40 இலட்சம் தென்னங்கன்றுகளை நடும் தேசிய வேலைத்திட்டத்தின் யாழ்ப்பாண மாவட்ட அங்குரார்ப்பண நிகழ்வு பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமான அங்கஜன் இராமநாதனினால் நேற்று முன்தினம் கரவெட்டியில் வழங்கி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் 500 தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(படம் :- சிவசாந்தன்)

# பருத்தித்துறை சந்தையில் பி.சி.ஆர்.பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பொதுச் சந்தை மற்றும் அதனை அண்டிய சந்தை மேற்கு பகுதியில் சந்தேகத்துக்கு இடமானோரிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் இவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


அவர்களில் மூவர் சந்தை வியாபாரிகள் என்றும் இருவர் சந்தை மேற்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

அதனால் பருத்தித்துறை சந்தையை தற்காலிகமாக மூடுவதா? அல்லது கட்டுப்பாடுகளுடன் இயங்க அனுமதிப்பதா? என்பது தொடர்பில் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆராய்ந்து வருகின்றனர். (7-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தம் இல்லாதொழிக்கப்படும்

## சரத் வீரசேகர மீண்டும் சூளுரை



(கொழும்பு)

**பொதுமக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. ஆகவே தனிமைப் படுத்தல் சட்டம் தொடர்ச்சியாக செயற்படுத்தப்படும். 13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதில் மாற்றமும் இல்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

பேச்சு சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடல் ஜனநாயக உரிமையாகக் காணப்படுகிறது. இதனை இவர்கள் தவறான முறையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். கொரோனா வைரஸ் தாக்கம் பூகோள மட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் தாக்கத்தை நாமும் தற்போது எதிர்க் கொண்டுள்ளோம்.

போராட்டங்கள் அலையாக திரண்டுள்ளமையின் நோக்கத்தை நன்கு அறிவோம். சுகாதாரத் தரப்பினரது கோரிக்கைகளுக்கு அமையவே போராட்டகாரர்கள் கைது செய்யப்பட்டு தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இதனை தவறு என எவராலும் குறிப்பிட முடியாது. கொரோனா வைரஸ் தாக்கத்தினால் கடந்த காலங்களில் நாட்டு மக்கள் பல விடயங்களையும் முக்கிய பண்டிகைகளையும் கொண்டாடாமல் தியாகம் செய்துள்ளார்கள். பண்டிகைகளுக்கு தடை விதிக்கப்பட்டதால் எவரும் வீதிக்கிறங்கி போராடவில்லை.

நாட்டு மக்களின் சுகாதார பாதுகாப்பை கருத்திற் கொண்டு தனிமைப்படுத்தல் சட்டம் அமுலில் உள்ளது. இதன் காரணமாக ஒன்றுகூடல் மற்றும் போராட்டங்களில் ஈடுப்படுவதற்கு மறு அறிவித்தல் விடுக்கும் வரையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. ஒரு சிலரது பொறுப்பற்ற செயற்பாட்டினால் ஒட்டுமொத்த மக்களையும் நெருக்கடிக்குள்ளாக்க முடியாது. தனிமைப்படுத்தல் சட்டம் விரிவுபடுத்தப்பட்ட வகையில் செயற்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# ரம்புக்வெலவிற்கு ஆளும் கட்சியில் இருந்து எழுந்த கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

பணிப்பகிஷ்கரிப்பை நடத்திவரும் ஆசிரியர்கள் தரித்திரர்கள் என்று கூறி அரசாங்கத்தின் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெலவுக்கு ஆளுங்கட்சியில் இருந்தே கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்டவர்கள் அண்மையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது பொலிஸார் அவர்களைத் தாக்கிச் சென்று தனிமைப்படுத்தலில் அனுமதித்தனர்.

இந்த செயற்பாட்டை எதிர்த்து ஆசிரியர்கள் இணையவழி ஊடாக கற்பித்தல் நடவடிக்கையிலிருந்து விலகியுள்ளனர்.

இந்த விமர்சனத்திற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுவரும் நிலையிலேயே ஆளுங்கட்சியின் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பிலும் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. (நி-5)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 4½ செவ். சூரி 11 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: Manager BOC<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர்,அரச தொழில், படித்த பெண்<br>தொ.இ: B/11933 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 18 செவ். சூரி 10 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:. Computer Science<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உத்தியோகம் பார்ப்பவர்<br>தொ.இ:G/11971 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 61 செவ். சூரி 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: வியாபாரம், கடை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11934 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 24 செவ் 1 சூரி 10 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் :Management Assistance<br>எதிர்பார்ப்பு: தகுந்த தனியார், அரச உத்தியோகம், வெளிநாடு<br>தொ.இ:G/11973 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 26½ செவ் 4 சூரி 5 இல்<br>உயரம்: 178cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி கணக்காளர் (அரச)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11935 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: செவ் 9 சூரி 10 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: கணனி தட்டெழுத்து (தனியார்)<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார் வேலை<br>தொ.இ:G/1975 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: செவ் 9 சூரி 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: அரச அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வீடு<br>தொ.இ: B/11936 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: செவ் 8 சூரி 10 இல்<br>தகைமை/தொழில்: அரசாங்க நில அளவையாளர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த படித்த மாப்பிள்ளை<br>தொ.இ:G/11976 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# மனித நுகர்விற்கு பொருத்தமற்ற அழகுசாதனப் பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

கொழும்பில் மனித நுகர்விற்கு பொருத்தமற்ற 50 இலட்சம் பெறுமதியான அழகுக் கலை பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

வரி செலுத்தாமல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான அழகுக் கலை பொருட்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மாலை நுகர்வோர் விவகார ஆணையத்தினால் இந்த அழகு கலை பொருட்கள் மீட்கப்பட்டன. (நி-5)

# மேலும் 2 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள்

(கொழும்பு)

மேலும் 2 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி நாட்டுக்கு கிடைக்கவுள்ளதாக ஔடத உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த தொகை தடுப்பூசிகள் கிடைத்த பின்னர் நாட்டில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை மேலும் விரைவுபடுத்த முடியும் என இராஜாங்க அமைச்சர், பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (நி-5)

# தரிசு வயல்களில் தெங்குப் பயிர்ச்செய்கை

(கொழும்பு)

தரிசு வயல்களில் தெங்கு செய்கையை ஆரம்பிப்பதற்கு தென்னை பயிர்ச்செய்கை சபை தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில், 'B' மற்றும் 'C' தரங்களிலுள்ள தரிசு வயல்களில் தெங்கு செய்கையை ஆரம்பிக்கவுள்ளதாக சபையின் பொதுமுகாமையாளர் மானெல் [illegible] தெரிவித்துள்ளார்.

அதற்காக ஏக்கரொன்றிற்கு 150,000 ரூபாய் வரை நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், தெங்கு செய்கைக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதாகவும் தென்னை பயிர்ச் செய்கை சபை தெரிவித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அம்புலன்ஸ் திரும்பி வரவேண்டும் இல்லையேல் போராடுவோம்

## துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர்


(அக்கராயன்)

ஐயங்கன்குளம் வைத்திய சாலைக்கு உரிய அம்புலன்ஸ் வைத்தியசாலைக்கு திரும்பி வராததன் காரணமாக ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட உள்ளதாக துணுக்காய் பிரதேச சபை உறு ப்பினர் ச.சுயன்சன் தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது, கடந்த 2019 ஆம் ஆண்டு ஐயங்கன்குளம் வைத்தியசாலையில் இருந்து திருத்தத்திற்கென கொண்டு செல்லப்பட்ட ஐயங்கன்குளம் வைத்தியசாலையின் அம்புல ன்ஸ் வண்டி மீண்டும் ஐயங்கன் குளம் வைத்தியசாலைக்குத் திரும்பி வரவில்லை. இதன் காரணமாக ஐயங்கன்குளம் வைத்தியசாலையினை நம்பி உள்ள பழையமுறிகண்டி, புத்து வெட்டுவான், ஐயங்கன்குளம் பகுதிகளைச் சேர்ந்த 350 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வைத்திய நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

நோயாளர்களின் நிலை தொடர்பாக அதிகாரிகள் சிந் திக்க வேண்டும். விரைந்து அம்புலன்ஸ் திரும்பி வர வேண்டும் இல்லையேல் கிராம மக்கள் ஆகிய நாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் பிரதேச சபை உறுப்பி னர் தெரிவித்தார். (7-8-350)

# புதுக்குடியிருப்பில் 250 கிலோ வெடிகுண்டு மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட் டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணைப்பாலை பகுதியில் வெடிக்காத நிலையில் நில த்தில் புதையுண்ட பாரிய வெடிகுண்டு ஒன்று மீட்கப் பட்டுள்ளது.

சுமார் 250 கிலோவிற் கும் அதிக நிறைகொண்ட குறித்த குண்டு இருப்பது அவதானிக்கப்பட்ட நிலை யில் குறித்த குண்டினை அகற்றுவது தொடர்பில் புது க்குடியிருப்பு பொலிஸார் சட்ட நடவடிக்கையினை மேற் கொண்டுள்ளனர்.(7-8-281)

# அக்கராயனில் பொதுக் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன

## பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் பொதுத் தேவைக்கென ஒதுக் கப்பட்ட காணிகளுக்குள்ளும் தற்போது மக்கள் குடியேறி வரு கின்ற நிலைமை காணப்படு கின்றது. அக்கராயனில் பிரதேச செயலகம் உருவானால் காணி தேவைப்படும் என ஐந்து ஏக்கர் வரையான காணி பொதுக் காணியாக நீண்டகாலமாக ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இக்காணியினைச் சூழ தற் போது மக்கள் குடியமர்ந்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் அக்கரா யனில் வங்கி ஒன்றினை இயங்க வைப்பதற்காக பொதுக் காணிகளை ஆராய்ந்த போது பொதுக் காணி இல்லாத நிலைமை அடையாளப்படுத்த ப்பட்டுள்ளது. இந்நிலையில் அக்கராயன் எரிபொருள் நிலை யத்திற்கு அருகில் எதிர்காலத் தில் பிரதேச செயலகம் உரு வாக்கப்பட்டால் தேவை என ஒதுக்கப்பட்டுள்ள பொதுக் காணி யினையும் நெருங்கி குடியிருப் புகள் அமைந்து வருவதன் காரணமாக எதிர்காலத்தில் பிரதேச செயலகம் உருவாகும் போது பொதுக் காணிக்கான நெருக்கடி உருவாகும். கரைச்சி பிரதேச செயலக காணி உத்தியோகத்தர்கள் அக்கரா யன் கிராம உத்தியோகத்தர் பிரிவின் பொதுக் காணியினை அடையாளப்படுத்தி பொதுக் காணிகளில் குடியேறுகின்ற மக்களுக்கு மாற்றுக் காணி களை வழங்குவதற்கான நட வடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அக்கராயன் கிராம உத்தி யோகத்தர் பிரிவில் பொதுக் காணிகள் இல்லாத நிலைமை ஏற்படுமானால் கரைச்சி பிரதேச செயலகமே எதிர்காலத்தில் பொதுக் காணி இல்லாததற் கான முழுப் பொறுப்பினையும் ஏற்க வேண்டி வரும் என அக்க ராயன் பொது அமைப்புகளி னால் தெரிவிக்கப்பட்டுள ளது. (7-8-350)




# நிரந்தர கிராம உத்தியோகத்தரை நியமியுங்கள்

## அக்கராயன் மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் கிராம உத்தியோகத்தர் பிரிவி ற்கு நிரந்தர கிராம உத்தியோ கத்தரை நியமிக்கும்படி இக் கிராம உத்தியோகத்தர் பிரிவு மக்கள் கரைச்சி பிரதேச செய லாளரிடம் கோரிக்கை விடுத்து ள்ளனர். 700 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்கின்றன.

இக்கிராமத்தின் கிராம உத்தியோகத்தர் அண்மையில் ஓய்வு பெற்றதையடுத்து ஸ்க ந்தபுரம் கிராம உத்தியோகத் தரே பதில் கிராம உத்தியோக த்தராக பணியாற்றும் நிலை யில் அக்கராயன் கிராம உத்தி யோகத்தர் பிரிவு மக்கள் நான்கு கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று ஸ்கந்தபுரம் சென்றும் கையொப்பங்கள் வாங்குகின்ற நிலைமை காணப்படுகின்றது. இந்நிலையில் அக்கராயன் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு நிரந்தரக் கிராம உத்தியோ கத்தரை நியமிப்பதற்கு நடவடி க்கை எடுக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் உப நகரமாகக் காணப்படுகின்ற அக்கராயன் கிராம உத்தியோகத்தர் பிரி வுக்கு நிரந்தர கிராம உத்தி யோகத்தர் பணியில் இல்லாதது இக்கிராம உத்தியோகத்தர் பிரிவு மக்களை பாதித்துள்ளது.(7-8-350)

# முக்கொம்பன் வீதியினை புனரமையுங்கள்



(அக்கராயன்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரத் தில் இருந்து பூநகரி முக் கொம்பன் செல்லும் வீதி தற்போது கடும் சேதமடைந் துள்ள நிலையில் நடை பெறுகின்ற ஒரேயொரு இல ங்கை போக்குவரத்து சபை யின் பேருந்து சேவை இடை நிறுத்தப்படுவதற்கான சூழல் உருவாகி உள்ளது.

கடந்த இரு மாதங்க ளுக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஸ்கந்தபுரம் முக்கொம் பன் வீதியினை புனரமைப்ப தற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக அறி வித்திருந்தது.

ஆனால் தற்போது பெரும் குண்டும் குழியுமாக மாறி உள்ள குறித்த வீதி யினை புனரமைக்காததன் காரணமாக போக்குவரத் தினை மேற்கொள்ள முடி யாத நிலைமை ஏற்பட்டு ள்ளது.

குறித்த வீதி நிரந்தர புனரமைப்பிற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பத னால் தற்போது தற்காலிக புனரமைப்பினை அவ சரமாக மேற்கொள்வதற்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங் கிணைப்புக் குழு இவ்வீதி க்கு பொறுப்பான திணை க்களத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடு க்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டு ள்ளதுடன் மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுத் தலை வர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வீதி புன ரமைப்புத் தொடர்பாக கவ னம் செலுத்த வேண்டும் எனவும் போக்குவரத்து பாதிப்பினை எதிர் கொண் டுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(7-8-350)

# முல்லைத்தீவு மாவட்ட காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட் டத்தின் நடப்பாண்டுக்கான முதலாவது காணிப் பயன் பாட்டுத் திட்டமிடல் குழுக் கூட்டம் பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் பிரதேச மட்ட காணிப் பயன் பாட்டுத் திட்டமிடல் குழுக் கூட்டத்தில் சிபாரிசு செய்ய ப்பட்டு மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் குழுக் கூட்டத்தில் அனு மதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு ள்ள காணி தொடர்பான விபரங்கள் பிரதேச செயலர் ரீதியாக ஆராயப்பட்டுள ளது. மேலும் பொதுத் தேவைக்கு பயன்படுத்தப் படும் காணிகளை கையளி த்தல், நீண்டகால மற்றும் குறுகிய காலம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணி களுக்கான அனுமதி பெறல், காணிக் கச்சேரி மூலம் அனுமதிப்பத்திரம் வழங் கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளுக்கு அனுமதி வழங்குதல் தொடர்பான விடயங்கள் பிரதேச செயலக ரீதியாக ஆராயப்பட்டு தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டு ள்ளன. (7-8-281)

# உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட த்தில் கொரோனா அசாதாரண சூழ்நிலை காரணமாக வாழ் வாதாரம் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு SLT மொபிடெல் நிறு வனத்தினால் உலருணவு பொதிகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் பண்டார வன் னியன் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த செயற்றிட்டத்தின் கீழ் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 20 குடும்ப ங்களும் மாந்தை கிழக்கு மற் றும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் தலா 90 குடும்பங்களுமாக 200 குடும்ப ங்கள் தெரிவு செய்யப்பட்டு 1700.00 ரூபாய் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப் பட்டுள் ளன.

இதன்போது கரைதுறை ப்பற்று பிரதேச செயலர் பிரிவில் கள்ளப்பாடு தெற்கு மற்றும் தண்ணீரூற்று மேற்கில் தெரிவு செய்யப்பட்ட 20 குடும்பங்க ளுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி ஆரம்பித்து வைக் கப்பட்டது. ஏனையவர் களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

16.07.2021
ஆனி 32, வெள்ளிக்கிழமை,
சப்தமி பின்னிரவு 2.40 மணிவரை
அத்தம் பின்னிரவு 1.22 மணிவரை
சுபநேரம் 6.00 - 7.30 மணிவரை
இராகுகாலம் 10.30 - 12.00 மணிவரை
சந்திராஷ்டமம்: சதயம், பூரட்டாதி,
அமிர்தசித்தம்

வளவன்

**மேஷம்** – நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறும்.

**ரிஷபம்** – வழிப்பாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்** – பொதுக் காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கடகம்** – நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், பாசத்தோடு பழகியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள்.

**சிம்மம்** – பேச்சில் இனிமை தென்படும், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** – வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்.

**துலாம்** – புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** – வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், விருந்தினர்களின் வருகையுண்டு, உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**தனுசு** – செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மகரம்** – வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்களை தீட்டுவீர்கள்.

**கும்பம்** – துயரங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், வேலைச் சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**மீனம்** – சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

நன்கு அறிந்து கொள்வதே நம்பிக்கையினும் சிறந்தது

# மாற்றான் தாய் மனப்பாங்குடன் அரசியல் கைதிகளை நடத்த வேண்டாம்

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு

(முறிகண்டி)

**கொவிட் தொற்று நான்காவது சுற்று சிறைச்சாலைக்குள் பரவத் தொடங்கியுள்ளது எனக் குரலற்றவர் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக அவர்கள் அனுப்பிய ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. தமிழ் அரசியல் கைதிகளைப் பொறுத்தமட்டில் இவர்கள் இரண்டாவது தடவையாக இந்தத் தொற்றுப் பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் மிக நீண்டகாலமாக சிறைத் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளதால் பல்வேறு வகையிலான நோய் நொடிகளால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆகவே தற்போது நாட்டுக்கு கணிசமான அளவு தடுப்பூசிகள் தருவிக்கப்பட்டு வருகின்றதன் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியம். அந்த வகையில் நெடுநாள் நோய் நொடிகளோடு சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு முன்னுரிமை அளித்து அவர்களை ஆபத்தில் இருந்து மீட்க வேண்டியது அரசின் கடமையாகும்.

சிறைத்துறையும் மருத்துவத்துறையும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் மாற்றான் தாய் மனப்பாங்குடன் நடந்து கொள்வதை நிறுத்த வேண்டும். அரசியல் கைதிகளை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிப்பதில் ஏதேனும் நடைமுறைஇடையூறுகள்காணப்படுமாயின் விசேட பாதுகாப்பு கட்டமைப்புக்களுடன் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்கு அவர்களை மாற்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் தேவையான சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முடியும். தமிழ் அரசியல் கைதிகள் எதிர்நோக்கும் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பில் தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகள் அரசுடன் பேசித்தீர்வுகளை கண்டடைய வேண்டும் என வலியுறுத்துகின்றோம் என்றுள்ளது. (7-8-33-100)

# கேப்பாபிலவு விமானப்படை தனிமைப்படுத்தலில் தொடரும் போராட்டம்



(பனிக்கன்குளம்)

கொழும்பில் பாராளுமன்ற சுற்றுவட்டப் பகுதியில் கடந்த 8 ஆம் திகதி நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டு கேப்பாபிலவு விமானப்படை தலைமையக தனிமைப்படுத்தல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், பௌத்த மதத் தலைவர்கள் இருவர் உள்ளிட்ட செயற்பாட்டாளர்கள் தனிமைப்படுத்தல் கண்காணிப்பில் இருந்து கொண்டு தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அந்த வகையில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து கொண்டு தங்கள் எதிர்ப்பினை தெரிவித்தவாறு போராட்டத்தை தொடர்கின்றனர். இது குறித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கருத்து வெளியிடுகையில், இந்த அரசு தனிமைப்படுத்தப்பட்டுள்ள தங்களை விடுவிக்காவிடின் இதனிலும் விட பாரிய செயற்பாட்டிற்கு போகவுள்ளதாக தெரிவித்துள்ளார். சுகாதார வழி முறைகளைப் பாவித்து மக்களின் போராட்டங்களை நசுக் கும் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும். அரசாங்கம் என்ன செய்கின்றது என்று நாங்கள் பார்த்து தீர்மானம் எடுப்போம். இந்த நாட்டில் மக்கள் எங்களுக்காக போராடுகின்றார்கள்.

மக்களுடன் நாங்கள் இணைந்து இந்த நாட்டில் ஜனநாயகம் சுதந்திரத்தை வெல்வதற்காக போராடுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (7-8-281)

# மெசிடோ நிறுவனத்தினால் உதவிப் பொருட்கள் கையளிப்பு

(பனிக்கன்குளம்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக பைஸர் தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் இடம்பெற்று வருகின்ற நிலையில் அங்கே பணி புரிகின்ற தொண்டர்கள் மற்றும் ஊசி செலுத்திக் கொள்கின்ற மக்கள் பயன்படுத்துவதற்கு என ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான உதவிப் பொருட்கள் நேற்று பிரதேச செயலாளரிடம் மன்னார் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான மெசிடோ நிறுவனத்தினரால் கையளிக்கப்பட்டது. (7-8-285)



முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் எலும்பியல் அறுவைச்சிகிச்சை நிபுணர் மற்றும் குழுவின் ஆலோசகர் மருத்துவர் சுதர்சனால் முதல் முறையாக முழங்கால் மூட்டு மாற்று சத்திரசிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. மருத்துவர்களின் மகத்தான பணிக்கு மக்கள் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

(படம்:- தவசீலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# எல்லைப் பிரச்சினைக்கு தீர்வுகாண முன்னுரிமையளிக்கும் இந்தியா- சீனா

(டில்லி)

**எல்லை தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னுரிமையளிக்க இந்தியாவும் சீனாவும் இணங்கியுள்ளன.**

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஹி ஆகியோருக்கிடையில் தஜிகிஸ்தானில் இடம்பெற்ற சந்திப்பில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலைமை நீடிப்பதானது, இரு தரப்பினருக்கும் உகந்ததல்ல என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், இரு தரப்பு மூத்த இராணுவத் தளபதிகளுக்கு இடையிலான ஒரு கூட்டத்தை நடத்துவதற்கும் இருவரும் இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-7)

## அஞ்சுவதும் அடிபணிவதும் தமிழர் பரம்பரைக்கே கிடையாது

### விஜய்க்கு ஆதரவாக சீமான்



(சென்னை)

ரோல்ஸ் ராய்ஸ் கார் வரி விவகாரத்தில் விஜய்க்கு ஆதரவாக பலர் பேசி வரும் நிலையில் சீமான் விஜய்க்கு ஆதரவாக அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் "அன்புத்தம்பி விஜய்! அஞ்சுவதும் அடிபணிவதும் தமிழர் பரம்பரைக்கே கிடையாது!

துணிந்து நில்! இது அவதூறு தானே ஒழிய, குற்றம் இல்லை! தொடர்ந்து செல்! "ஏறு ஏறு ஏறு நெஞ்சில் வலிமை கொண்டு ஏறு" என்று உன் படத்தில் வரும் பாடல் வரிகள் போல மிகுந்த உள உறுதியோடு முன்னேறி வா தம்பி!" என்று ஆதரவாக குரல் கொடுத்துள்ளார். (8-7)

## போப் ஆண்டவர் வாடிகன் திரும்பினார்



(ரோம்)

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் ஆண்டவர் பிரான்சிஸ் பெருங்குடல் பிரச்சினை காரணமாக சிகிச்சை பெறுவதற்காக இத்தாலி தலைநகர் ரோமில் உள்ள கெமல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அறுவைச் சிகிச்சை நடந்த 10 நாட்களுக்குப் பிறகு போப் ஆண்டவர் பிரான்சிஸ் நேற்று முன்தினம் வாடிகன் திரும்பினார். (8-7)

## 'கொங்கு நாடு' இற்கு வைகைப்புயல் எதிர்ப்பு

(சென்னை)

கொரோனா வைரஸை எதிர் கொள்ள தமிழக முதல் வரின் பொது நிவாரண நிதிக்கு "வைகைப்புயல்" வடிவேலு ஐந்து இலட்ச ரூபாய் நிதியை நேற்று முதல்வர் மு. க. ஸ்டாலினை சென்னை தலைமை செயல கத்தில் சந்தித்து நேரில் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது,

ராம்நாடு, ஒரத்தநாடு என ஏராளமான நாடு இருக்கும் பொழுது திடீர் என்று கொங்கு நாடு ஒரு சப்ஜெக்ட்.

நல்லா இருக்கும் தமிழ் நாட்டை எதுக்கு பிரிக்க வேண்டும்? நாடு... நாடு... என தனித் தனியாக பிரித் தால் என்னாவது.!

நான் அரசியல் பேசவில்லை. இதெல்லாம் பேசும் போது தலை சுத்துது" என்று மேலும் அவர் தெரிவித்தார். (8-7)

## இரண்டு நாய்களுக்கு மரண தண்டனை

(இஸ்லாமாபாத்)

உலகின் மிக கொடூர மான குற்றங்கள் செய்தவர்களுக்கு மரண தண்டனை வழங் கப்படுவது வழக்கம்.

அண்மையில் பாகிஸ்தானில் இரண்டு நாய்களுக்கு மரண தண்டனை வழ ங்கப் பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின் றன.

கடந்த மாதம் பாகிஸ்தானில் மூத்த சட்டத்தரணி ஒருவர் நடைப் யிற்சியில் ஈடுபடுவதற்காக வீதியில் நடந்து சென்றபோது, அங்கிருந்த இரண்டு நாய்கள் குறித்த சட்டத்தரணியை தாக்கி யுள்ளன.

இது குறித்து அந்த நாய்களின் உரிமையாளர் மீது சட்டத்தரணி வழக்கு பதிவு செய்தார்.

எனினும் நாய்களின் உரிமையாளருக்கும் சட்டத்தரணிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் சில நிபந்தனை களை முன்வைத்த சட்டத்தரணி வழக்கை மீளப் பெற்றுக் கொண்டார்.

தன்னை அவரது நாய்கள் தாக்கியதற்காக நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும்.

இனிமேல் அவர் ஆபத்தான மற்றும் கொடூர மான மிருகங்களை வீட்டில் செல்லப பிராணியாக வளர்க்கக் கூடாது.

அத்துடன் இந்த இரண்டு நாய்களையும் உடனடியாக கொலை செய்ய வேண்டும் என நிபந்தனைகளை முன் வைத்துள்ளார்.

இந்த நிபந்தனைகளை நாய்களின் உரிமையாள ரும் ஏற்றுக் கொண்டதால் இந்த வழக்கு தொடரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (8-7)

## தலிபான்களின் முன்னே... அகதிகள் தஜிகிஸ்தா...




(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இருந்து 347 அகத கள் இரண்டு நாட்களில் மத்திய ஆசிய நாடான தஜிகிஸ்தானுக்குள் நுழைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# புதிய கொவிட் கட்டுப்பாடுகளை எதிர்த்து பிரான்ஸில் வெடித்தது போராட்டம்

(பாரிஸ்)

**பிரான்ஸில் அமுலாக்கப்பட்டுள்ள புதிய கொவிட்-19 கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, நாட்டின் பல்வேறு பாகங்களிலும் சுமார் 19 ஆயிரம் பேர் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**



தலைநகர் பாரிஸில் 2 ஆயிரத்து 250 பேர் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், அவர்களில் ஒரு தரப்பினரைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறை பணியாளர்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என்றும், பெரும்பாலான பொது இடங்களுக்கு செல்வதற்கு தடுப்பூசி அட்டை அவசிய மாகும் என்றும் கடந்த செவ்வாய்க்கிழமை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது.

அத்துடன், தடுப்பூசி ஏற்றப்படாதவர்கள், உணவகங்களுக்கு செல்வதற்கு கொவிட்-19 தொற்று ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தே பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். எவ்வாறிருப்பினும், குறித்த அறிவித்தல் வெளியானதன் பின்னர், கொவிட்-19 தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளவதற்கு பொதுமக்கள் முன்பதிவுகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-7)

# வீடுகள் இடிந்து வீழ்ந்ததில் முப்பது பேர் மாயம்

ஜேர்மனில் அனர்த்தம்



(பேர்லின்)

மேற்கு ஜேர்மனிய நகரமான ஷுல்ட், ரைன்லேண்ட்- ஃபால்ஸில் ஆறு வீடுகள் இடிந்து விழுந்ததில் 30 பேர் காணாமல் போயுள்ளனர்.

பலத்த மழை காரணமாக நிம்ஸ் நதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, குறித்த பகுதிக்குள் புகுந்ததன் விளைவாகவே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

அனர்த்தத்தினால் வீடுகளை இழந்து சிக்கித் தவிக்கும் மக்களுக்கு உதவ மீட்புப் படையினரும், இராணுவத்தினரும் போராடி வருகின்றனர்.

ஜேர்மனிய வானிலை சேவை நேற்று முன்தினம் மூன்று மேற்கு மாநிலங்களின் சில பகுதிகளுக்கு ஒரு தீவிர வானிலை எச்சரிக்கையை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-7)

# மனிதரிடத்தில் பறவைக்காய்ச்சல் சீனா உறுதி செய்தது



(பீஜிங்)

சிச்சுவான் மாகாணத்தில் எச் 5 என் 6 பறவைக் காய்ச்சலால் மனித நோய்த்தொற்று ஏற்பட்டதை சீனா உறுதிப்படுத்தியுள்ளது என்று அந்நாட்டு அரச ஊடகங்கள் நேற்றைய தினம் தெரிவித்தன.

அதன்படி பீஜிங் நகரில் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 55 வயது ஆணொருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜனவரி மாதம்,பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி 6 இலட்சத்து 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பறவைகளிடம் பறவைக் காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்படுத்தின.

பெப்ரவரியில் ரஷ்ய அதிகாரிகள் எச்5என் 8 பறவைக் காய்ச்சல் பறவைகளிலிருந்து மனிதர்களுக்கு முதன்முறையாக பரவியதாக கூறினார். இதன்போது ரஷ்ய கோழி ஆலையில் ஏழு பேர் நோய் வாய்ப்பட்டனர். (8-7)

## உலகளவில் கொரோனா

உயிரிழப்பு :- 4 079 883

தொற்று :- 189 499 696

(நேற்று மாலை நிலவரம்)

# மீள உயரும் தொற்று

(ஜெனிவா)

உலகெங்கும் கொரோனா வைரஸ் தொற்று மற்றும் கொரோனா மரணங்கள் மீண்டும் அதிகரித்து வருகின்றன. இது மற்றொரு சுற்று கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய நிலைக்கு பல நாடுகளைத் தள்ளியுள்ளதுடன் இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கான நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது.

கடந்த 9 வாரங்களாக உலகளவில் குறைந்து வந்த கொரோனா மரணங்கள் கடந்த வாரம் முதல் மீண்டும் அதிகரித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. (8-7)

# ...னேற்றத்தால் ஆப்கான் ...னுக்கு தப்பியோட்டம்

தஜிகிஸ்தான் எல்லைக் காவலர்களை மேற்கோள் காட்டி அரச தகவல் நிறுவனம் நேற்று முன்தினம் அகதிகள் உயிரைக் காப்பாற்ற தலிபானியர்களிடமிருந்து தப்பி ஓடிவிட்டனர் என்றும், எல்லையைக் கடக்கும்போது இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் கூறியுள்ளது.

ஆப்கானிலிருந்து வெளிநாட்டுப் படையினர் பின்வாங்குவதால் தலிபான் போராளிகள் அங்கு பெரும் முன்னேற்றத்தை கண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் தலிபான்கள் பாகிஸ்தானுடனான எல்லையில் முக்கிய மூலோபாய எல்லைக் கடப்பைக் கைப்பற்றியதாகக் கூறினர்.

எனினும் ஆப்கானிய உள்துறை அமைச்சகம் ஆயுதக் குழுவின் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் குறித்த பகுதியில் அரசாங்கப் படைகள் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதாகவும் வலியுறுத்தியது. (8-7)

# அடுத்தடுத்து 22 நிலநடுக்கங்கள் அச்சத்தில் தாய்வான் மக்கள்

(தாய்பே)

கிழக்கு தாய்வானில் நேற்று முன்தினம் ஏற்பட்ட அடுத்தடுத்த 22 நிலநடுக்கங்களால் அங்குள்ள மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

தாய்வான் நாட்டின் கிழக்கு கடற்கரை பகுதியில் உள்ள ஹுவாலியன் கவுண்டி நகரத்தில் நேற்று முன்தினம் தொடர்ச்சியாக 2 மணி நேரங்களுக்கு நிலநடுக்கங்கள் பதிவாகின.

காலை 6.52 மணிக்குத் தொடங்கிய நிலநடுக்கம் நகரின் பல்வேறு பகுதிகளில் அடுத்தடுத்து ஏற்பட்டதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

ரிக்டர் அளவில் 5.2 ஆக பதிவான முதல் நிலநடுக்கம் இதர பகுதிகளில் 3 முதல் 5 ரிக்டர் அளவுகளில் பதிவானது.

தொடர்ச்சியான 22 நிலநடுக்கங்களால் அச்சமடைந்த மக்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியே நின்றனர். (8-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# கட்டுப்பாடற்ற முறையில் அதிகரித்து வரும் பார்த்தீனிய நச்சுக் களை

பொருளாதார ரீதியில் முக்கியமற்ற மற்றும் விரும்பத்தகாத தாவரங்கள் களைகள் ஆகும். இவை இயற்கை வளங்களாகிய நீர், சூரியஒளி மற்றும் ஊட்டச்சத்துக்கள்ள பெற்றுக் கொள்ள பயிர்களுடன் போட்டியிடுகின்றன.

இவ்வாறான இயல்புகளை ஒத்த களைகளில் பார்த்தீனியம் ஒருவகை நச்சுக் களை ஆகும். பார்த்தீனியமானது மனிதன் மற்றும் விலங்குகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் நச்சுக் களையாகவும் சூழலின் உயிர்ப்பல்வகைமைக்கு மிகவும் அச்சுறுத்தலாகவும் இருந்து வருகின்றமை ஆராய்ச்சி ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஒரு குறுஞ்செடி ஆகிய பார்த்தீனியம், பல கிளைகளைக் கொண்டு அமைந்ததுடன், மூன்று அல்லது நான்கு அடி உயரமாக வளரக் கூடிய ஆல்வேரைக் கொண்டமைந்ததுடன் வெண்மை வைர வடிவிலான பூக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இது பேச்சு வழக்கில் கரட்புல், காங்கிரஸ்களை, மல்லிக்கிழங்குப் புல் என பலவகை பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இவை விளை நிலங்கள், வீதியோரங்கள், தோட்டங்க்ள் மற்றும் புல்வெளிகளில் களைகளாகச் செழித்துக் காணப்படுகின்றன.

பார்த்தீனியச் செடிகளின் தாய் நிலமாக வட அமெரிக்கா அறியப்படுகின்றது. ஆக்கிரமிப்புச் செடியாகக் கருத்தப்படும் பார்த்தீனியம் 1950-1960 காலப்பகுதியில் இந்தியாவில் ஏற்பட்ட பஞ்சத்தினைப் போக்குவதற்காக அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையோடு பார்த்தீனிய விதைகளும் வந்தடைந்ததாக நம்பப்படுகின்றது.


தற்போது நான்கு கண்டங்களில் பரவலாகக் காணப்படுகின்றது. இலங்கையில் 1987 ஆம்ஆண்டு காலப் பகுதியில் இந்திய இராணுவத்திற்கு உணவு வழங்கும் பொருட்டு இந்திய அரசினால் பல செம்மறி ஆடுகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன. அப்போது பார்த்தீனிய விதைகள் ஆடுகளின் உடலில் ஒட்டியிருந்தோ அல்லது மலத்தில் சமிபாடு அடையாமல் உணவாகவோ இருந்து இலங்கைக்கு வந்து சேர்ந்திருக்கலாம் என கருதப்படுகின்றது.

குறிப்பாக இது வளரும் போது பூந்தாதுக்களை அதிகமாக உற்பத்தி செய்யும். இவை குறித்த காலத்திற்கு பின் பூக்கள் காய்ந்த பின்னர் காற்றில் அதிக சதவீதத்தில் பரவுகின்றன. இதனால் அது படையெடுக்கும் தாவரமாக விளங்குகின்றது. பார்த்தீனியத்தின் வாழ்க்கை வட்டம் 3-4 மாதங்களே ஆகும். ஆகவே ஒரு வருடத்தில் 3 தொடக்கம் 4 சந்ததிகளை உருவாக்கி சூழலிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதன் தீவிரமான பரவல் சூழலை மட்டுமல்லாது பொருளாதாரத்திற்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது.

உலகளாவிய தரவரிசைப்படுத்தப்பட்ட சூழலிற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய முதல் 7 களைகளின் பட்டியலில் பார்த்தீனியமும் இடம்பெற்றுள்ளது. அது மட்டுமன்றி உலகளாவிய ஆக்கிரமிப்பு இனங்களின் தரவுத்தளத்திலும் பார்த்தீனியம் பட்டியலிடப் பட்டுள்ளது.

பார்த்தீனியக் களை தாவரத்தால் ஏற்படும் நன்மைகளைவிட தீமைகளே அதிகம் காணப்படுகின்றன. பார்த்தீனியத்தின் வெள்ளை நிறப்பூக்கள் முதிர்ச்சியடையும் போது ஏறத்தாழ 25,000 வரையிலான விதைகளை உருவாக்கக்கூடியது. இவை சூழலிலுள்ள உயிரினங்களில் சுவாசக் குழலினுள் சென்று ஒவ்வாமையினை ஊக்குவிக்கின்றது. இவற்றின் மேற்றோலில் ஒருவிதமான மேல் மயிர்கள் காணப்படுகின்றன. இவை விலங்குகளின் உடலில் படும்போது அரிப்பு போன்ற உணர்வு ஏற்படுகின்றது. மற்றும் ஒவ்வாமையைத் தூண்டுவதாகவும் காணப்படுகின்றது.

பார்த்தீனியம் எனும் நச்சுக் களையினைத் தொடுவதனால் மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் தோல் அழற்சி, சுவாசம் தொடர்பான



சீரின்மை பிரச்சினையும் ஏற்படுகின்றது. பார்த்தீனியக் களை தாவரத்தின் எல்லாப் பகுதிகளும் பல இரண்டாம் நிலை வளர்ச்சி மாற்றப் பொருட்களைக் கொண்டுள்ளது என பார்த்தீனியத்தில் செய்யப்பட்ட வேதியல் பகுப்பாய்வு நிரூபிக்கின்றது. அவையாவன, அல்கொலைட்ஸ் (Alkaloids), பார்த்தீனின் (Parthenin), கம்பிரோல் (kaempferol), பீ-கோமாரிக் அமிலம் (p-coumaric acid) மற்றும் கபிக் அமிலம் (caffeic acid).

இவை அதிகளவாக இலையில் மட்டுமன்றி பழம், வேர், தண்டு, பூக்கொத்திலும் காணப்படுகின்றது. பிரதானமாக செஸ்குயிற்றர்பீன் (sesqui terpene) எனும் பதார்த்தம் இருப்பதனால் பல ஒவ்வாமைத் தாக்கங்கள் மனிதர்களுக்கு ஏற்படுகின்றது. அது மட்டுமன்றி இக்களையை உண்ணும் பசுக்களின் பால் மற்றும் இறைச்சி ஒருவித கசப்புத் தன்மையினையும் சிறிதளவான அதாவது மறைமுகமான நச்சுத் தன்மையினையும் கொண்டிருக்கும்.

பார்த்தீனிய நச்சுக் களை எல்லா விதமான சூழல் நிலைமைகளுக்கும் இசைவாக்கம் அடையக் கூடிய ஆற்றலைக் கொண்டதுடன் நிலத்தினை ஊடுருவி பயிர்களின் விளைச்சலுக்கு அதிகளவு சேதத்தினை கொடுக்கவல்லது. குறித்த காலத்திற்கு மேல் ஒருவர் தொடர்ச்சியாக பார்த்தீனியம் நச்சுக் களையுடன் தொடர்பில் இருப்பின் தோல் அழற்சி, அரிப்பு, ஆஸ்துமா, ஒவ்வாமை நாசி அழற்சி, காய்ச்சல் எரிவு கண்ணைச்சுற்றி கொப்பளங்கள் போன்ற அறிகுறிகள் தென்படும். வயிற்றுப்போக்கு மற்றும் மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகள் ஏற்படுகின்றன. கால்நடைகள் பார்த்தீனியத்தினை உண்ணுமாயின் தோல் நிறமிழப்பு, தோல் அழற்சி, வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

பார்த்தீனியத்தில் காணப்படும் பார்த்தீனின் (parthenin)எனும் பதார்த்தம் ஒருவித்திலை மற்றும் இருவித்திலைத் தாவரத்தின் முளை திறன் மற்றும் பயிர்களின் வளர்ச்சியை நிரோதிப்பதாக அறிக்கைப் படுத்தப்பட்டுள்ளது. இது உக்கும் இலைக்கழிவுகளின் மூலம் மண்ணை வந்தடைகின்றது. அத்துடன் வேர்க் கசிவினூடாக வெளியேறும் பார்த்தீனின் (parthenin) அருகிலுள்ள பயிர்களுக்கு அலிலோபத்திக் குறுக்கீடு (allelopathic interference) ஆக விளங்குகின்றது. அத்துடன் பார்த்தீனியம் அடர்ந்து வளர்ந்த பயிர் நிலங்களில் வளரும் பருப்பு வகை பயிர்களில் பழங்களின் வளர்ச்சியை நிரோதிப்பதுடன் பயிர்த் தாவரங்களில் பச்சையத்தின் அளவையும் குறைவடையச் செய்கிறது.

அத்துடன் பீடைகளுக்கு பார்த்தீனியம் மாற்றீடாகவும் விளங்குகின்றது. சூரியகாந்தியின் பீடையான ஸ்கராப்வண்டுக்கு (scarab beetle) பார்த்தீனியம் செடியானது நீண்ட காலத்திற்கு புகலிடமாக அமைகின்றது. பார்த்தீனியத்தின் ஊடுருவல் தரைக்கு மேலான தாவரங்களின் வளர்ச்சியை மட்டுமன்றி தரைக்கு கீழாகக் காணப்படும் கனியுப்புக்களின் அளவு என்பவற்றைப் பாதிக்கச் செய்கின்றது.

ஆக்கிரமிப்புத்திறன் மற்றும் அலோபதி இயல்பால் பார்த்தீனியத்திற்கு இயற்கையான சூழலினை சீர்குலைக்கக்கூடிய ஆற்றலுள்ளது. சில சந்தர்ப்பங்களில் பார்த்தீனியத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விளை நிலங்களில் வேற எந்தப் பயிர்களையும் காண முடியாததாக உள்ளது. இது மிக வேகமாக வேறு நிலங்களுக்கும் வாழிடங்களுக்கும் பரம்பலடைந்து சேதத்தினை விளைவிக்கும். பயிர் நிலங்களில் இருந்து பார்த்தீனிய நச்சுக் களையை வேரோடு அகற்றினாலும் அவற்றை வீதிகளில் மற்றும் பயிர்ச் செய்கை நிலங்களிலேயே எறியப் பட்டுள்ளது.

மேலும் களையினால் சுரக்கப்படும் நச்சுப் பதார்த்தமான ses quiterpenelactones இல் இருந்து வரும் தாக்கத்திலிருந்து தடுப்பதற்காக பல விவசாயிகள் வேரோடு அகற்றிய களையை எரிக்கிறார்கள். பார்த்தீனிய எச்சத்தை எரிப்பதால் மண்ணின் தன்மையை இல்லா தொழிப்பதுடன் மண்ணிலுள்ள சேதனப்பசளை மற்றும் கனிப்புக்களின் அளவு குறைவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

பார்த்தீனியத்தின் வலுவான பரம்பலைடதல் மற்றும் பரந்த சுற்றுச் சூழல் வரம்பின் காரணமாக இக்களையினை அழிப்பது அரசாங்கத்திற்கு மிகவும் சவாலாக அமைகிறது. எனவே பல பகுதிகள் ஏற்கனவே பெறப்பட்ட பௌதீக மற்றும் இரசாயன் முறைகள் இந்த நச்சுகளையை அகற்றுவதற்காக பிரயோகிக்கப்பட்ட போதிலும் அது விலை கூடிய, வினைத்திறனற்ற மற்றும் சூழலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய முறையாகவே காணப்படுகின்றது. பார்த்தீனிய உயிரியல் முறையில் கட்டுப்படுத்துவது வினைத்திறனான முறையில் காணப்படவில்லை என பரிசோதனைகள் மூலம் வேறு நாடுகளில் நிரூபித்துள்ளனர். ஏனென்றால் களையானது மிக விரைவாக மீள் உருவாக்கம் அடையக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளதுடன் பூச்சிகள் களை, தாவரத்தின் இலைப் பகுதியை மிக அதிகளவில் உட்கொள்வது இதனால் மேலும் இலையின் வளர்ச்சி அதிகரிக்கின்றது.

ஒருங்கிணைந்த அணுகுமுறைகளின் ஊடாக பார்த்தீனிய ஆக்கிரமிப்பை கட்டுப்படுத்த முடியும். இதற்குப் பொது விழிப்புணர்வினை மேம்படுத்தல் மற்றும் பங்கேற்பு அணுகுமுறைகள் என்பன கடைப்பிடிக்கப் படுதல் சிறந்தது. பார்த்தீனியத்தின் பயன்பாட்டுத்திறன் தொடர்பான ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்தல் மற்றும் அதன் செயற்றிறன்களை சோதனைகளின் மூலம் மதிப்பீடு செய்வது முக்கியமாகும். ஆராய்ச்சியாளர்கள், விவசாயிகள் அரசாங்க மற்றும் அரசாங்கமற்ற முகவர்களின் கூட்டு முயற்சிகள் ஊடாக கட்டுப்படுத்தல் குறிக்கோளை அடையலாம்.

பார்த்தீனியம் தொடர்பான சமீப ஆராய்ச்சிகள் அச்செடி மெடிசின் ஆகவும் உயிரியல் பூச்சிக்கொல்லி ஆகவும் பச்சை உரமாகவும் களை கொல்லியாகவும் நொதிய உற்பத்திக்கான மலிவான அடிமூலக்கூறு ஆகவும் உயிர்வாயு மூலமாகவும் வெளிப்படும் ஆற்றல் கொண்டது என்பதே தெளிவுபடுத்துகின்றன. இக்களையின் பயன்பாடுகளை கண்டு பிடித்தல் மூலம் மறைமுகமாக இதை ஒழிக்க வழிவகுப்பதோடு எதிர்காலத்தில் உயிரினங்களுக்கான ஒரு வரப்பிரசாதமாக அமையக்கூடும்.

நிவேதா சிவராஜா
விஞ்ஞானபீடம்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார விதிமுறை மீறல்களால் இதுவரை 50 ஆயிரம் பேர் கைது

(கொழும்பு)

**சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறியமைக்காக இதுவரை 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**



நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதியில் 190 நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல்இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 50 ஆயிரத்து 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 43 ஆயிரத்துக்கும் அதிகமானோர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் 7000 பேர் மீது வழக்குத் தொடரப்பட உள்ளதாகவும்பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார். (நி-5)

# பசுவதையைத் தடை செய்யும் சட்டமூலம் அமைச்சரவை அனுமதிக்கு முன்வைப்பு

(கொழும்பு)

நாட்டில் பசுவதையை முழுமையாக தடை செய்வதற்கான சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் உறுதிப்பாடு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சட்டமூலம் அடுத்து வரும் சில வாரங்களில் அமைச்சரவை அனுமதிக்காக முன்வைக்கப்பட உள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

பௌத்த சாசன அமைச்சர் என்ற அடிப்படையில், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் யோசனைக்கு அமைய, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் அனுமதி கிடைத்த பின்னர், சட்டமூலத்தை வர்த்தமானியில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதையடுத்து, ஏழு நாட்களின் பின்னர் குறித்த சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட வேண்டும்.

இதற்கமைவான, எண்ணக்கரு பத்திரத்திற்கு, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஜனாதிபதி சட்டத்தரணிகளாக எழுவர் நியமனம்

(கொழும்பு)

நாட்டில் பதிதாக 7 பேர் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக மன்றாடியார் நாயகமாக பதவி வகிக்கும் 7 பேரே இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, மிலிந்த குணதிலக்க, ஹரிப்பிரியா ஜயசுந்தர, விக்கும் ஆப்ரூ, ஷானக்க விஜேசிங்க, ரவிந்திர பத்திரனகே, நெரின் புள்ளே மற்றும் சேத்திய குணசேகர ஆகியோர் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி சட்டத்தரணிகள் விரைவில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர். (நி-5)

# ஒரே தடவையில் 100 நகரங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

நீண்ட காலமாக நாட்டில் அபிவிருத்தி செய்யப்படாத 100 நகரங்களை ஒரே தடவையில் அழகுபடுத்தி அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும் என நகர அபிவிருத்தி அமைச்சின் முன்னேற்ற ஆய்வு கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முன்னேற்ற ஆய்வு கூட்டத்தில்இந்த விடயம்தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கு அமைய பிரதான நகரங்கள் மற்றும் பிரதேச நகரங்களுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளை குறைத்து, அனைத்து மக்களுக்கும் சமமான நகர வசதிகளை பெற்றுக்கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

குறைந்த வருமானம் பெறுவோருக்காக மஹரகம, நுகேகொட மற்றும் கோட்டை ஆகிய பகுதிகளில் புதிதாக வீடமைப்பு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுவருவதுடன்,கோட்டை வீடமைப்பு திட்டம் விரைவில்ஆரம்பிக்கப்படவுள்ளது.

தனியார் முதலீட்டாளர்களுடன் இணைந்து மேலும் 12 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கைமேற்கொண்டுள்ளது.

தற்போதுள்ள நடைபாதைகளுக்கு மேலதிகமாக 25 மாவட்டங்களில் புதிதாக மேலும் 28 நடைபாதைகள் நிர்மாணிக்கப்படும்.

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை இதுவரை நடுத்தர வருமானம் பெறுவோருக்காக 4 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்து வருவதுடன் அத்திட்டம் 2024 ஆம் ஆண்டு நிறைவு பெறும் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## செஞ்சிலுவைச் சங்கம்

உலகத்திலே அவ்வப்போது ஏதாவது சண்டை நடந்துகொண்டுதான் இருக்கிறது. 1859 இலே ஜுன் 24 இல் ஒரு போர் நடந்தது. அது "செல் போரினா போர்" நிறையப்பேர் அடிபட்டு விழுந்தார்கள். அதை ஒருத்தர் பார்த்தார்.

அவருக்கு மனசு கேட்கவில்லை. உயிருக்காக போராடிக்கொண்டிருக்கிற அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தார். ஓடிப்போய் பக்கத்திலே இருந்த கிராமத்து மக்களையெல்லாம் அழைத்து வந்தார்.

அடிபட்டுக் கிடந்தவர்களுக்கு வேண்டிய மருத்துவ உதவிகளையெல்லாம் செய்தார். அவர்களையெல்லாம் காப்பாற்றினார்.

போர் எவ்வளவு கொடுமையானது என்பதை அவர் நேரிலே பார்த்துப் புரிந்து கொண்டார்.

1862 இலே போரின் கொடுமைகளைப் பற்றி புத்தகம் ஒன்று எழுதினார். ஐரோப்பிய நாடுகள் பூராகவும் அதை விநியோகம் செய்தார். இப்படியெல்லாம் செய்தவர் யார் தெரியுமா? அவர்தான் ஹென்றி டுனால்டு.

சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனிவா நகரத்திலே 1828 மே மாதம் 8 ஆம் திகதி பிறந்தவர். உலக செஞ்சிலுவைச் சங்கம் தோன்ற காரணமானவர் இவர்தான். அவர் ஞாபகார்த்தமாகத்தான் மே. 8 உலக செஞ்சிலுவை நாள் என்று கொண்டாடுகிறோம்.

இவருடைய எழுத்தும் செயலும் எல்லோரையும் சிந்திக்க வைத்தது.

அப்படி சிந்தித்த ஒருத்தர் குஸ்தாவ் மொய்நியே என்பவர். ஜெனிவா நாட்டு நலவாழ்வு சங்கத் தலைவர் சட்டத்தரணி.

அவர் என்ன செய்தார் என்றால் ஒரு சேவைக் குழுவை அமைத்தார். சுவிட்சர்லாந்து தேசிய படையின் தளபதி ரூல்லாமே குயுபூர் என்பவர் அதுக்குத் தலைவர். டுனால்டு என்பவர் தான் செயலாளர்.

முக்கியமானவர்கள் எல்லாம் அதிலே உறுப்பினர்கள். எல்லோரும் சேர்ந்து 1863 இல் சிறப்பு மாநாடு ஒன்று நடத்தினார்கள்.

உலக அளவிலே பல அற்புதமான திட்டங்களையெல்லாம் தீட்டினார்கள். 14 நாடுகளைச் சேர்ந்த 36 பிரதிநிதிகள் அதிலே கலந்து கொண்டார்களாம்.

ஒவ்வொரு நாட்டிலேயும் போரிலே கடுமையான காயம் பட்டவர்களுக்கும் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உடனடியாக தேவைப்படுகின்ற மருத்துவ உதவி செய்தது.

பரிதவிக்கும் உள்ளங்களுக்கு பரிவோடும் பாசத்தோடும் அணுகி துயர் துடைக்கின்றது. இதுதான் குறிக்கோள். அதுக்கு என்று ஒரு தனிக்கொடி அடையாளச்சின்னம்.

கொடியிலே ஈரான் சிவப்பு சூரியனையும் சிங்கத்தையும் அமைத்தது. துருக்கி அரபு நாடுகள் சிவப்பு பிறைச்சந்திரனை அமைத்தது. மற்ற நாடுகள் எல்லாம் வெள்ளைக்கொடி, அதுக்கு மத்தியிலே செஞ்சிலுவை அடையாளம்.

1919 இல் ஐக்கிய நாடுகள் சபை இதை அங்கீகரித்தது. சர்வதேச சேவை நிறுவனமாக இப்போது இது செயற்பட்டு வருகிறது.

1920 இல் இந்தியா சட்டம் இயற்றியது. இந்தியாவின் குடியரசுத் தலைவர் தான் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர். மாநிலங்களுக்கு அந்தந்த மாநில ஆளுநர்கள் தலைவர்கள்.

மாவட்டங்களுக்கு மாவட்ட கல்வி அதிகாரிகள் தலைவர்கள்.

1915 இல் முதல் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பாவிலே பள்ளிக்கூடங்களிலே இந்தச் சங்கம் அமைக்கப்பட்டது.

அதுக்குப் பின்பு எல்லா நாடுகளிலேயும் படிப்படியாக பள்ளிக்கூடங்கலேயே இந்தச் சங்கம் அறிமுகமாகிவிட்டது.

மனித நேயத்தை வளர்க்கிறதிலே செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவைகளை யாரும் மறுக்க முடியாது, மறக்க முடியாது.

போர் என்று வந்து விட்டாலே மனித நேயத்தைத் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும்!

ஒரு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. பலபேர் அடிபட்டு விழுந்து கிடக்கிறார்கள்.

ஒருத்தனுக்கு கால் போய்விட்டது. கத்துகிறான், துடிக்கிறான் பக்கத்திலே நின்று கொண்டிருந்தவன்...

"ஏன்டா கால் போனதுக்காக இப்படித் துடிக்கிறாய்? அங்கே பாரு தலையே போனவன் எல்லாம் பேசாமல் அமைதியாகக் கிடக்கிறான். நீ இப்படித் துள்ளுகிறாயே!" என்றானாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

28

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



**1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (பின்விளைவு ஏற்பாடுகள்) சட்டம் (Provincial Councils (Consequential Provisions) Act No 12 1989)**

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் ஒவ்வொரு மாகாண சபைக்கும் மாகாணத்துக்கு ஏற்புடையதான நியதிச்சட்டத்தை ஆக்கிக் கொள்ள ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மாகாண சபையால் ஆக்கிக் கொள்ளப்படும் ஒவ்வொரு நியதிச்சட்டமும் ஆளுநரின் சம்மதத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

ஆளுநர் நியதிச்சட்டத்துக்கு சம்மதம் வழங்கலாம் அல்லது நியதிச்சட்டத்தை மீண்டும் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளும்படி மாகாண சபைக்கு திருப்பி அனுப்பலாம். எனவே இயற்றப்படும் நியதிச் சட்டத்திற்கு அனுமதி வழங்குவது ஆளுநரே.

உறுப்புரை 154G மாகாண சபைக்கு சட்டங்களை உருவாக்க உதவுகிறது. எவ்வாறாயினும், இந்த அதிகாரம் அரசியலமைப்பில் உறுப்புரை 75 மற்றும் உறுப்புரை 154 (G) (10) உள்ளிட்ட விதிகளுக்கு உட்பட்டது. உறுப்புரை 75 இன்படி பாராளுமன்றத்திற்கு வரையறை செய்யப்படாத சட்டவாக்க அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 170 ஆவது உறுப்புரையில் உள்ள 'சட்டம்' என்பதன் வரையறை திருத்தப்படாமல் இருப்பதால் மாகாண சபையால் இயற்றப்பட்ட ஒரு சட்டம் (அதாவது நியதிச்சட்டம்) சட்டத்தின் அரசியலமைப்பு நிலையை அடையவில்லை.

**உறுப்புரை 154G மாகாண சபைக்கு சட்டங்களை உருவாக்க உதவுகிறது. எவ்வாறாயினும், இந்த அதிகாரம் அரசியலமைப்பில் உறுப்புரை 75 மற்றும் உறுப்புரை 154 (G) (10) உள்ளிட்ட விதிகளுக்கு உட்பட்டது. உறுப்புரை 75 இன்படி பாராளுமன்றத்திற்கு வரையறை செய்யப்படாத சட்டவாக்க அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.**

13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154G (10) கூறுவது என்னவென்றால் இலங்கை முழுவதற்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கு ஏதேனும் விடயம் தொடர்பில், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க சட்டங்களை ஆக்குவதற்கு அரசியலமைப்பின் மூலம் பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை, இந்த உறுப்புரையில் (154G) உள்ள எதுவும் மதிப்புக் குறைப்பதாக வாசிக்கப்படுதலோ பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது என்பதாகும்.

1988 ஆம் ஆண்டில், மாகாண சபை அமைப்பு செயற்படத் தொடங்கியபோது, மாகாண சபை நிரல் மற்றும் ஒருங்கிணை நிரலில் உள்ள விடயங்கள் தொடர்பாக சுமார் 300 சட்டங்கள் நடைமுறையில் இருந்தன. இச் சட்டங்கள் அனைத்தும் மத்திய அரசின் அமைச்சர்களின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்களுக்கு உட்பட்டவையாக இருந்தன.

எனவே, மாகாண சபைகள் இச்சட்டங்களில் உள்ள அத்தகைய அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் மாகாண அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மாற்ற வேண்டுமாயின் அதற்குத் தேவையான நியதிச்சட்டங்களை உருவாக்க வேண்டும்.

ஆனால் மாகாண சபைகளால் அவ்வாறான நியதிச் சட்டங்களை உருவாக்க முடியவில்லை. அதனால் அச்சட்டங்களில் பெரும்பாலானவை தற்போதும் மத்திய அரசின் அமைச்சர்களின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்களுக்கு உட்பட்டவையாக இருக்கின்றன.

இப் பிரச்சினையை ஓரளவேனும் நிவர்த்தி செய்யுமுகமாக ஒஸ்டின் பெர்னாண்டோ தனது கட்டுரையில் கூறியது போல் 1989 ஆம் ஆண்டின் மாகாண சபைகள் (பின்விளைவு ஏற்பாடுகள்) சட்டம் இல.12 (Provincial Councils (Consequential Provisions) Act No 12 1989) உருவாக்கப்பட்டது.

**மத்திய அரசுச் சட்டங்களில் உள்ள அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் மாகாண அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மாற்ற வேண்டுமாயின் அதற்குத் தேவையான நியதிச்சட்டங்களை உருவாக்க வேண்டும். ஆனால் மாகாண சபைகளால் அவ்வாறான நியதிச் சட்டங்களை உருவாக்க முடியவில்லை.**

மாகாண சபை நிரலில் உள்ள விடயங்கள் சம்பந்தமான மத்திய அரசின் அமைச்சர்களிடம் இருக்கும் அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் மாகாண அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மாற்றம் செய்வதற்கு 1989 ஆம் ஆண்டின் மாகாண சபைகள் (பின்விளைவு ஏற்பாடுகள்) சட்டம் இல.12 நிறைவேற்றப்பட்டது.

**மாகாண சபை நிரலில் உள்ள விடயங்கள் சம்பந்தமான மத்திய அரசின் அமைச்சர்களிடம் இருக்கும் அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் மாகாண அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மாற்றம் செய்வதற்கு 1989 ஆம் ஆண்டின் மாகாண சபைகள் (பின்விளைவு ஏற்பாடுகள்) சட்டம் இல.12 நிறைவேற்றப்பட்டது. இது ஒரு தற்காலிகத் தீர்வாகும்.**

இதன் மூலம் 13 ஆம் அரசியலமைப்பு திருத்தம் நடைமுறைக்கு வரும் (1987 நவம்பர் 14 இற்கு) முன்னர் மத்திய அரசின் விடயங்களும் அவற்றுக்கான அதிகாரிகளும் எனக் கூறப்பட்டவை தற்போதைய மாகாணசபை விடயங்கள் எனவும் அவற்றுக்கான மாகாண அதிகாரிகள் எனவும் கொள்ளப்பட வேண்டும் என்ற திருத்தம் செய்யப்பட்டது.

இது ஒரு தற்காலிகத் தீர்வாகும். அதாவது இந்த சட்டம் ஒரு மாகாண சபை அத்தகைய விடயங்களுக்கு தனது மாகாண நியதிச் சட்டத்தை உருவாக்காவிட்டால், மத்திய அதிகாரிகள் விரும்பினால் அவர்கள் தொடர்ந்தும் அவ் விடயங்களின் மீது அதிகாரத்தை செலுத்த முடியும் என்று பொருள்படக்கூடியதாகவே இயற்றப்பட்டுள்ளது.

மேலும் இச் சட்டம் ஒருங்கிணை நிரலிலுள்ள விடயங்களுக்கு பொருந்தக்கூடியதாக இருக்கவில்லை. இதனால் பல விடயங்கள் இந்தத் திருத்தச் சட்ட வரம்புக்குள் வராது இருப்பதாக காணப்பட்டுள்ளன. மாகாண சபைகள் தங்களது விடயங்களுடன் முரண்படும் இவ்வாறான சட்டங்களை கண்டு அறிந்து அவசியமான மாற்றங்களைச் செய்ய நியதிச் சட்டங்களை இயற்ற வேண்டும்.

அவ்வாறு செய்வதற்குத் தேவையான மனித மற்றும் பொருள் வளங்களைக் கொண்ட சட்ட வரைவுப் பிரிவு (சட்ட வரைவு செய்பவர்) அவர்களிடம் இதுவரையில்லை.

சட்ட வரைவுகளைச் செய்யும் ஆற்றல் இல்லாத காரணத்தால் மாகாண சபைகள் அந்த விடயங்களில் தமது அதிகாரங்களைச் செயற்படுத்த முடியாது உள்ளன.

அத்தகைய விடயங்களில் மத்திய அரசு தொடர்ந்தும் தனது அதிகாரத்தைப் பிரயோகித்து வருகிறது. இதுவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளிலுள்ள மிகப்பெரிய பிரச்சினையாகும்.

இவை பொதுவாக மற்றைய மாகாணங்களில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதில்லை. காரணம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தவிர ஏனைய மாகாணங்களில் பிரதேச அரசியற் கட்சிகள் மாத்திரம் அதிகாரத்தைத் தம்வசப்படுத்தவில்லை.

ஸ்ரீலங்கா சுததந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போன்ற தேசிய அரசியற் கட்சிகள் இந்த மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, மேற்படி மாகாண சபைகளின் அதிகாரம் தேசிய அரசியற் கட்சிகளிடமே குவிந்துள்ளன.

தேசிய அரசியற் கட்சிகள் மாகாணத்தின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதில்லை. மேற்படி கட்சிகள் தேசிய அரசியல் தேவைகளை நோக்கமாகக் கொண்டே செயற்படுகின்றன. இதனால் இம் மாகாணங்களில் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதிகளின் பொறுப்பற்ற தன்மையே வீதி விபத்துக்களுக்குக் காரணம்

## அஜித் ரோஹண

(கொழும்பு)

நாடு முழுவதும் பதிவான வீதி விபத்துக்களினால் நேற்று முன்தினம் ஒன்பது உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை வீதி விபத்துக்களினால் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் இடம்பெறும் வீதிவிபத்துக்களும் அவற்றால் உயிரிழப் போரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக சட்டங்களையும் தண்டனைகளையும் வலுப்படுத்தினாலும், வாகன சாரதிகள் உரியவாறு ஒழுக்கமாக செயற்படாதவிடத்து விபத்துக்களைக் குறைக்க முடியாது என்று குற்றங்கள் மற்றும் வீதிப்போக்குவரத்துக்குப் தொடர்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி-5)



# ஒரே நாளில் மட்டும் 384,763 பேருக்கு தடுப்பூசி

(கொழும்பு)

நாட்டில் ஒரே நாளில் 3 இலட்சத்து 84 ஆயிரத்து 763 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அதற்கமைய நேற்று முன்தினம் 3 இலட்சத்து 38 ஆயிரத்து 572 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதலாம் டோஸும் 35 ஆயிரத்து 410 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டன.

இதனையடுத்து, நாட்டில் இதுவரையில் 37 இலட்சத்து 64 ஆயிரத்து 750 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதலாம் டோஸும் 11 இலட்சத்து 83 ஆயிரத்து 391 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டன.

அதேநேரம், நேற்று முன்தினம் 3 ஆயிரத்து 365 பேருக்கு ஸ்புட்னிக் வீ தடுப்பூசியின் முதலாவது டோஸும் 7 ஆயிரத்து 416 பேருக்கு பைசர் தடுப்பூசியின் முதலாவது டோஸும் செலுத்தப்பட்டன. (நி-5)

# வைத்திய மாணவருக்கு டெல்டா தொற்று

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியான பிலியந்தல, மிரிஸ்வத்தை பிரதேசத்தில் டெல்டா மாறுபாடினால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்த நபர் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கை மேற்கொள்ளும் வைத்திய மாணவன் என அந்தப் பிரதேசத்திற்கு பொறுப்பான சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிகிச்சைக்காக அவர் கொழும்பு ஐ.டி.எச்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதற்கமைய இதுவரையில் இலங்கையில் 22 டெல்டா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்



## குடும்பத்தை ஒன்றிணைக்கும் சோமவார விரதம்



இளம்வயதில் கற்பனைச் சிறகுகளுடன் வானில் இறக்கை கட்டி பறந்த சீமந்தினிக்கு, கற்பனைக் கோட்டைகள் கலைந்தன. இருப்பினும் மன்னன் மகள் அல்லவா? மன தைரியத்தை விடவில்லை. மாமுனிவராகிய யாக்ஞவல்கிய முனிவரின் மனைவி, யான மைத்ரேயியை அடைந்து அவளை வணங்கி மனக் கவலையை தெரிவித்தாள்.

அந்த ஜோதிடர்களில் ஒருவர் "மன்னா உன் மகள் அழகில் லட்சுமி. கலைகளில் கலைமகள் வீரத்திலும் தீரத்திலும் சிறந்து விளங்குவாள். உலகமே போற்றிப்புகழும்படி கணவருடன் பல காலம் சேர்ந்து வாழ்வாள்" என்றார்.

ஆனால் இன்னொரு ஜோதிடர் முகம் வாட்டமாக இருந்ததை கவனித்த மன்னன், அவருடைய கருத்தையும் கேட்டார். அதற்கு அவர் சொன்ன பதில் மன்னரை அதிர்ச்சி அடைய செய்தது. 'மன்னா! நான் சொல்வதற்காக வருத்தப்படக்கூடாது. உங்கள் மகள் திருமணம் ஆன சிலநாட்களில் மாங்கல்ய பாக்கியத்தை இழப்பாள். இது ஜாதக வாக்கு' என்றார்.

இதைக்கேட்ட மன்னர் எல்லையில்லா வேதனை அடைந்தார். மகளைப் பார்க்கும்போதெல்லாம்அவரை துயரச்சுமை வாட்டியது. காலம் கடந்தது. மன்னரின் மகள் சீமந்தினி மணப்பருவம் அடைந்தாள். அவளது தோழிகள் அவளுடைய ஜாதகத்தில் வரவிருக்கும் ஆபத்தைக் கூறினார்கள்.

### ஈசனிடம் சரணடைந்த சந்திரன்

தட்சனின் இருபத்தி ஏழு பெண்களையும் சந்திரன் திருமணம் செய்து கொண்டான். திருமணத்தின் போது அனைத்து பெண்களிடமும் அன்புடன் இருக்க வேண்டும் என்று தட்சன் சந்திரனிடம் உறுதி வாங்கினான். ஆனால் சந்திரன் ரோகிணியிடம் மட்டும் அதிகமான அன்பு காட்டினான். அதைக் கண்ட மற்ற பெண்கள் தட்சனிடம் சென்று முறையிட்டனர். இதனால் கோபம் கொண்ட தட்சன், சந்திரனை 'தேய்ந்து போவாய்' என்று சாபம் கொடுத்தான்.

தேய்ந்து கொண்டு வந்த சந்திரன் கடைசியில் சிவபெருமானிடம் தஞ்சமடைந்தான். அவனுக்கு அடைக்கலம் கொடுத்த சிவபெருமான், சந்திரனை தலையில்எடுத்து வைத்து கொண்டார். அதனால் சாபம் பாதியாக குறைந்தது. அதாவது பாதி நாட்கள் வளர்வதும், பாதி நாட்கள் தேய்வதுமாக மாறினான் சந்திரன். இப்படி தான்வளர்பிறை, தேய்பிறை உருவானது.

இவ்வாறு சந்திரனை சிவபெருமான் திருமுடியில் அமர்த்தியது சோமவாரத்தில்தான். 14 ஆண்டுகள் சோமவாரம் பூஜை செய்யும் கணவன்- மனைவிக்கு, முக்தி பேற்றினை கொடுக்க வேண்டும் என்று ஈசனிடம் வேண்டினான் சந்திரன். அவனது விருப்பத்தை சிவபெருமான் நிறைவேற்றினார். (தொடரும்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 200 | 200 |
| தக்காளி | 100 | 140 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 50 |
| கோவா | 100 | 170 | 180 | 200 |
| கரட் | 150 | 160 | 180 | 200 |
| பூசணி | 100 | 100 | 80 | 100 |
| புடோல் | 100 | 90 | 100 | 120 |
| வாழைக்காய் | 40 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 | 300 | 280 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 300 | 240 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 160 | 150 |
| பயற்றங்காய் | 160 | 150 | 120 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | 180 | 200 |
| பீற்றூட் | 160 | 140 | 100 | 160 |
| கறிமிளகாய் | 250 | 200 | 240 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 350 | 300 |
| போஞ்சி | 160 | 180 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 60 | 50 |
| தேசிக்காய் | 120 | 130 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 50-80 |
| இராசவள்ளி | --- | --- | 300 | --- |
| வெங்காயப்பூ | 250 | 220 | 280 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தேவதையின் தீர்ப்பு



அதைக் கேட்ட இருவரும் தம் தவறை உணர்ந்து, "எங்களை மன்னித்துவிடுங்கள். நாங்கள் இனிமேல் இது போன்ற தவறுகளை எல்லாம் செய்யமாட்டோம்" என்று கூறினர்.

பின் தேவதை அவர்களைப் பார்த்து, "உங்களுக்கு ஏதாவது பரிசு தர விரும்புகிறேன். என்ன வேண்டும்? கேளுங்கள்" என்றது.

"நீங்கள் கொடுத்த இந்த அறிவுரையே எங்களுக்கு விலைமதிக்க முடியாத பரிசு" என்று ஒரே குரலில் கூறினர்.

"உங்களது இந்தப் பரிசை எங்களது மற்ற நண்பர்களுக்கும் கொடுத்து, அவர்களையும் நல்வழிப்படுத்துவோம்" என்றாள் சீதா.

"மாணவர்களாகிய நீங்கள்தான் இந்த பூலோகத்தின் தூண்கள்.

தன்னம்பிக்கையும்தன்னடக்கமும் கொண்டு வெற்றி பெற வாழ்த்துகள்" என்று கூறி மகிழ்ச்சியுடன் மறைந்தது தேவதை.

ரவியும் சீதாவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர் உண்மையான நட்புடன்.

(முற்றும்)

# மகாபாரதம்

எவனிடம் பொருள் இருக்கிறதோ அவனுடன் நெருங்கிய சுற்றத்தார்கள் இருப்பர். எவனிடம் பொருள் இருக்கிறதோ அவனே சிறந்த அறிஞன். அவனே தலைவன்.




ஆகவே யானையைக் கொண்டு யானையைப் பிடிப்பது போலப் பொருளைக் கொண்டு பொருளைச் சேர்க்க வேண்டும்.

மலையிலிருந்து நதி நீர் பெருகுவது போல பொருளில்இருந்து தான் தருமம் பெருகுகிறது. உண்மையில் உடல் இளைத்தவன் இளைத்தவன் அல்ல. பொருளற்றவனே இளைத்தவன் ஆவான்.

பகை அரசரின் நாட்டைக் கவர்வது அரச நீதி. அரச வம்சத்தை ஆராய்ந்தால் இதன் உண்மை விளங்கும். ஒரு காலத்தில் இந்தப் பூமி திலீபனுடையதாக இருந்தது.

பின் நகுஷன் கைக்குப் போனது. பின் அம்பரீஷனுடையதாகியது. பின் மாந்தாவுக்குச் சொந்தம் ஆனது. தற்போது உம்மிடம் உள்ளது. எனவே முன்னோர்களைப் போல அரச நீதி உணர்ந்து நீர் ஆட்சி புரிய வேண்டுமேயன்றிக் காட்டுக்குப் போகிறேன் என்று சொல்லக் கூடாது" என்று அருச்சுனன் சொல்லி முடித்தான்.

அருச்சுனன் கூறிய காரணங்களை கேட்டும் தருமர் மனம் மாறவில்லை. துறவு மேற்கொள்ள இருக்கும் தன் முடிவில் மாற்றமில்லை என்றார்.

அவர் அருச்சுனனிடம் "நான் சொல்வதை உன் ஐம்புலன்களையும் ஒருமுகப்படுத்தி நான் சொல்வதைக் கேள். அப்போது நான் சொல்வதில் உள்ள நியாயம் உனக்குப் புரியும்.

முனிவர்கள் சேர்க்கையால் நான் மேலான நிலைமையை அடையப் போகிறேன். நீ சொல்வதால் அரசாட்சியை நான் மேற்கொள்ளப் போவதில்லை. நான் காட்டுக்குச் செல்லப் போவது உறுதி.

கானகம் சென்று கடுந்த வம் இருக்கப்போவது உறுதி. தவிர்க்க இயலாது. உலகப்பற்று நீங்கி முனிவர்களுடன் கூடி ஆத்ம சிந்தனையில் திளைப்பேன்.

உடலை சாத்திரப்படி உண்ணாவிரதத் தால் இளைக்கச் செய்வேன். இரண்டு வேளையும் நீராடுவேன்.

காட்டில் உள்ள பறவை, விலங்குகளின் இனிய ஒலிகளைக் கேட்டு மனம் மகிழ்வேன். தவம் செய்வோர் மேற்கொள்ளும் சாத்திர விதிப்படி பின்பற்றுவேன்.

விருப்பு, வெறுப்பு, இன்ப துன்பம், மான அவமானம் ஆகியவற்றிலிருந்து விலகி எப்போதும் தியானத்தில் இருப்பேன்.

எனக்கு இனி நண்பரும் இல்லை. பகைவரும் இல்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி வாழ்வது என்பதைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் தொடர்ந்தால், நீங்கள் நீண்டநாள் வாழ்வது உறுதி. - எஸ்னெகா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எல்லோரும் கைவிட்ட நிலையில் மக்கள் விழித்தெழுந்தால் மட்டுமே...

நாடு பூராகவும் கொரோனாத் தொற்றின் வேகம் மீண்டும் அதிகரிக்கத் தலைப்பட்டுள்ளது.

இதில் வடபகுதியும் தனது பங்குக்கு கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளது.

இதற்கு மேலாக, டெல்டா வைரஸும் தன் பங்குக்கு வடபகுதியில் தன்னை இனங்காட்டியுள்ளது.

ஆகவே ஒட்டுமொத்தத்தில் கொரோனாத் தொற்றின் அதிகரிப்பும் அதன் பாதிப்பும் அடுத்துவரும் தினங்களில் உச்சமடையும் எனக் கூறலாம்.

இவ்வாறானதொரு நிலைமை ஏற்படும் போது அதற்கு ஈடுகொடுத்து தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஏதேனும் உண்டா? என்ற கேள்வி எழும்போது, அதற்கான பதில் மௌனமாகவே இருக்கும்.

ஆம், கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக நாட்டை முடக்குவது பொருளாதார நிலையில் மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என அரசு அஞ்சுகிறது.

இருந்ததையெல்லாம் யுத்தத்துக்கும் பௌத்த மத ஆக்கிரமிப்புக்கும் அள்ளிக் கொட்டிவிட்டு,

இப்போது, கொரோனாத் தொற்று பரவி மக்கள் உயிரிழந்தாலும் பரவாயில்லை நாட்டை முடக்க முடியாது என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடாகவுள்ளது.

இது ஒருபுறமிருக்க, வெறுமனே எச்சரிக்கையை மட்டும் விடக்கூடிய அதிகாரத்தை கொண்ட சுகாதாரத் திணைக்களம் மற்றும் அரச மருத்துவர் சங்கம் - பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் என்பன கொரோனாத் தொற்றின் அதிகரிப்பை - அதன் ஆபத்தை எச்சரிக்கைப்படுத்தி களைத்துச் சோர்ந்து போயுள்ளன.

தவிர, தங்களின் எச்சரிக்கை குறித்து அரசின் எதிர்வினை பாதகமாக இருக்கின்ற சூழ்நிலையில், நடப்பது நடக்கட்டும் என்ற மன நிலைக்கு சுகாதாரத் தரப்பினர் வந்துவிட்டனர்.

இவ்வாறு அரசும் சுகாதாரத் தரப்பும் கைவிட்ட நிலையில், பொதுமக்கள் மிகப்பெரும் அவல நிலைக்கு ஆளாகி நிற்கின்றனர்.

இந்த ஆபத்தான கட்டத்தில் இருந்து மக்கள் மீண்டெழ வேண்டுமாயின், தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்வதைத் தவிர வேறு வழி எதுவும் கிடையாது.

ஆம், கொரோனாத் தொற்றிலிருந்து பொது மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் எத்தகைய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமோ அந்த நடைமுறைகளை மிக இறுக்கமாகப் பின்பற்றுவதும் கொரோனாத் தடைசார்ந்த விழிப்புணர்வை தாங்களாகவே சமூகத்துக்குப் பரப்புவதும் அவசியமாகிறது.

இவற்றைச் செய்வதன் மூலமாகவும் தர்மத்தின் வழியில் இறைபிரார்த்தனை மேற்கொள்வதன் மூலமாகவும் கொரோனாத் தொற்றிலிருந்து மக்கள் சமூகம் தப்பித்துக் கொள்ள முடியும்.

# அரசை எதிர்க்கும் மக்களை அடக்கவே தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்

## சஜித் அணியினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசுக்கு எதிராக அணி திரளும் மக்களை ஒடுக்குவதற்காகவே இந்த அரசு தனிமைப்படுத்தல் சட்டத்தை அமுல்படுத்துகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா குற்றம் சுமத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வாழமுடியாதநில்லைமைக்கு நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த அரசு அந்த நிலைமைக்கு நாட்டு மக்களைத் தள்ளியுள்ளது. விவசாயிகளுக்குத் தேவையான போதிய உரம் இல்லை.

எரிபொருள் விலையேற்றத்தையடுத்து மக்களின் வாழ்வாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இது மட்டுமல்லாது பாடசாலை செல்லும் மாணவர்களுக்குக் கற்றலைத் தொடர்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது.

வியாபாரிகளுக்கு வியாபாரத்தை முன்னெடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் அனைத்துப் பக்கங்களிலும் அரசு தோல்வியடைந்துள்ளது.

அனைத்துப் பக்கங்களிலும் அரசு அசாதாரண நிலையை அடைந்துள்ளது. இவற்றுக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடத் தொடங்கினால் மக்களை ஒடுக்கி அவர்களது மனவேதனையை வெளிப்படுத்த விடாது இந்த அரசு மக்களைத் துன்பத்துக்குள் தள்ளியுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் அரசுக்கு எதிரான மக்கள் அணியைச் செயலிழக்கச் செய்யும் செயற்பாட்டில் அரசிலுள்ள அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

தனிமைப்படுத்தலை ஒரு தண்டனையாக நடைமுறைப்படுத்தவே இந்த அரசு முயல்கின்றது.

சுகாதாரப் பாதுகாப்புக்காகத் தனிமைப்படுத்தல் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த அரசுக்கு எதிராக பொதுச் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகப் போராடியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர். பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும்கூட அவர்களைப் பலவந்தமாகத் தனிமைப்படுத்தியுள்ளனர்" என்றார். (ம)

# பருத்தித்துறை சிவன் கோவில் தேர்த் திருவிழாவில் தொற்றாளர்கள்

## நேற்றைய தீர்த்தத் திருவிழாவிற்கு பக்தர்களுக்கு அனுமதி மறுப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை சிவன் கோவிலில் இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் தொற்றாளர்களும் கலந்து கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனை அடுத்து நேற்று இடம்பெற்ற தீர்த்தத் திருவிழாவில் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்படி ஆலயத்தில் தேர் திருவிழாஉற்சவம் நடைபெற்றது. இதன்போது பெருமளவு பக்தர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இதன் பிற்பாடு அன்றைய தினம் பிற்பகல் வெளியான அறிக்கையில் தொற்றாளர்கள் சிலர் அப்பகுதியில் இனங்காணப்பட்டனர்.

அவர்கள் ஆலய தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டிருந்தமை சுகாதாரப் பகுதியினரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

மேலும் பருத்தித்துறை நகரப் பகுதியில் மரணச் சடங்கு ஒன்று இடம்பெற்றதாகவும் அதிலும் சிலர் கலந்து கொண்டுள்ளதாக சுகாதாரப் பகுதியினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-60)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### உள்நோக்கம்

உள்நோக்கங்கள் (Intention) மன இறுக்கத்தை (Tention) உள்ளேயே வைக்கின்றன. வெறுமையாக இருத்தல் என்றால் எல்லா உள்நோக்கங்களையும் விடுதல் என்று அர்த்தம். மன இறுக்கத்தோடு இருந்தால் ஓய்வு ஆழமானதாக இருப்பதில்லை. ஆனால் பக்தி இறைவனில் ஈடுபாடு உள்நோக்கங்களைக் கரைத்து விடுகிறது.

உள்நோக்கம் எதிர்காலத்தை நோக்கி உங்களைத் தள்ளுகிறது. ஆனால் பேரின்பம் எப்போதும் நிகழ்காலத்தில் இருக்கிறது. எவர் இந்த உண்மையை அறிகின்றாரோ, அவர் விவேகி. பேரின்பநிலையில் எப்போதாவது உள்நோக்கம் தோன்றினால் அது முயற்சியின்றி வெளிப்படுகிறது.

உள்நோக்கங்கள் (Intention) அதிகமாக இருந்தால் நீங்கள் அதிகமாக மன இறுக்கத்தில் (Tention) இருப்பீர்கள். உள்நோக்கங்களை மிகக் குறைவாக்குவதே உங்கள் கடைசி உள்நோக்கமாக இருக்கட்டும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

சவம் என்று எழுதி முதல் எழுத்தாகிய சகாரத்தின் மீது ஒரு வளைந்தகோடு இட்டால் சிவம் என்று பெருமை பெறுகின்றது.

அந்தச் சிறு கோடில்லையானால் சவம் என்று சிறுமையடைகின்றது. இந்த உடம்பு சிவம் என்ற ஒன்றிலிருந்து பெருமை பெறுகின்றது. சிவம் இல்லையானால் இது சவமாகிறது.

மாடிமீது ஏறுவதற்கென அமைந்த ஏணி மீதே பல மணிநேரம் நின்று கொண்டிருக்க ஒருவன் விரும்புவானா? விரும்பமாட்டான். அதுபோல் ஏணி போன்ற இந்த உடம்புடனேயே பல ஆண்டுகள் வாழப் பெரியோர்கள் விரும்புவதில்லை.

சீக்கிரமாக ஏணி மீது இவர்ந்து மாடிக்குப் போவதுபோல் சீக்கிரம் இந்த உடம்பைக் கொண்டு பிறவாமையைப் பெறவேண்டும். அதுதான் பெறுதற்கரிய பேறு. அதனைப் பெற வந்தது இந்த மானுட உடம்பு. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2021-16.08.2021



சமூகத்தில் நல்ல மாறுதல்கள் உண்டாக குரல் கொடுக்கும் மிதுன ராசி வாசகர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன், இராசியிலேயே பலம் பெற்று சஞ்சரிக்கின்றார். கும்ப குருவின் பார்வை உங்கள் இராசியிலேயே பதிவதால், நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும். நண்பர்களின் உதவியோடு நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெற வழிபிறக்கும். வருமானம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும்.

உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சனி வக்கிரம் பெற்றிருக்கின்றார். அஷ்டமத்துச் சனி வக்கிரம் பெறுவது நன்மைதான். என்றாலும் இரண்டிலுள்ள செவ்வாய், சனியைப் பார்க்கின்றார். எனவே எதிரிகளின் பலம் கூடுதலாகவே இருக்கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. எடுத்த முடிவை அடிக்கடி மாற்றுவீர்கள்.

குரு பகவான், 9 ஆம் இடத்தில் வக்கிரம் பெற்று உங்கள் இராசியைப் பார்க்கின்றார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறுவது நன்மைதான். என்றாலும் 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு என்பதால், மண வாழ்வில் மகிழ்ச்சி குறையலாம்.

வந்த வரன்கள் கைநழுவிச் செல்லலாம். தொழில் பங்குதாரர்கள் விலகிக் கொண்டு போட்டிக்கடை வைக்க ஏற்பாடு செய்யலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மீது வீண்பழிகள் வரலாம். பணிநீக்கம் செய்யப்படும் வாய்ப்பும் உண்டு.

### சிம்ம சுக்கிரனும் கன்னி சுக்கிரனும்

உங்கள் இராசிக்கு பஞ்சம -விரயாதிபதியான சுக்கிரன், ஜூலை 18 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் செல்கிறார். எனவே பிள்ளைகள் வழியில் பெரும் விரயம் ஏற்படலாம். சுய ஜாதக அடிப்படையில் பலம் வாய்ந்த திசாபுத்தி நடைபெறுமேயானால் அதை ஏற்றுக் கொள்ளலாம். ஓகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். அங்கு சுக்கிரன் நீச்சம் பெறுவதால் பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் தலைதூக்கும்.

கடமையில் தொய்வு ஏற்படும்.

### கடக புதன் சஞ்சாரம்

ஜூலை 19 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கின்றார். இராசிநாதன் தன ஸ்தானத்திற்கு செல்லும் இது ஒரு




அற்புதமான நேரமாகும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். விலகிப்போன சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். இல்லத்தில் சுபச் சடங்குகள் அடுத்தடுத்து நடைபெற வழிபிறக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வுடன் கூடிய முன்னேற்றம் கிடைக்கும்.

அரசின் சலுகைகளை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு நல்ல தகவல் வரும் சேரும்.

### சிம்ம செவ்வாய் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6, 11 அகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், ஜூலை 21 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் செல்கிறார். 6 இற்கு அதிபதி 3 இல் வரும்பொழுது 'விபரீத இராஜயோகம்' செயற்படும். எனவே திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திடீர் திடீரென வருமானம் வந்து மகிழ்விக்கும். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். கடன் சுமை குறைய புதிய வழிபிறக்கும். கட்டடப் பணி தொடரும். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வழக்குகள் முடிவிற்கு வரும்.

இம்மாதம் மகாலட்சுமியோடு இணைந்த விஷ்ணுவை வழிபட்டு வருவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

வருங்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வருமானம் போதுமானதாக இருக்கும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் ஆரோக்கியத்தில் கவனத்தோடு இருங்கள். கணவன் - மனைவிக்குள் பிரச்சினைகள் வந்தாலும், சமரசம் ஆகிவிடும். சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த இடமாறுதல் கிடைக்கும். வெள்ளிக்கிழமை தோறும் லட்சுமி கவசம் பாடி வழிபடுங்கள்.

## வருமானம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



சந்தர்ப்பங்கள் அனைத்தையும் சாதகமாக்கிக் கொள்ளும் கடக ராசி வாசகர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியில் செவ்வாய் நீச்சம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். அவரோடு தனாதிபதி சூரியன் மற்றும் சுக-லா[illegible]பதியான சுக்கிரன் ஆகியோரு[illegible] இணைந்திருக்கின்றனர். என[illegible] பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படு[illegible] தொழில் முன்னேற்றமும், காரிய வெற்றியும் கைகூடும்.

சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி, வக்கிரம் பெற்றிருக்கின்றார். கண்டச[illegible]னி வக்கிரம் பெற்றிருப்பது நன்மைதான். ஓரளவு தடைகள் அகலும். தன வரவு வருவதற்கான வழிபிறக்கும். ஜூலை 20 ஆம் திகதி வரை செவ்வாயின் பார்வை சனியின் மீது பதிகின்றது. எனவே மாதத் தொடக்கத்தில் முதல் நான்கு நாட்கள் மிக மிக கவனத்தோடு செயற்பட வேண்டும். செவ்வாய் சிம்மத்திற்கு வந்த பின்னால் செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். தடைக்கற்கள் தானாக விலகும்.

அஷ்டமத்தில் குரு பகவான் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான், 6 இற்கு அதிபதி வக்கிரம் பெறும்பொழுது எதிரிகள் பலம் குறையும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த மாற்றங்கள் எளிதில் வந்து சேரும். வீடு, வாகனம் வாங்க கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தால் அதுவும் கைகூடும்.

### சிம்ம சுக்கிரனும் கன்னி சுக்கிரனும்

ஜூலை 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் தன ஸ்தானத்திற்கு வரும் பொழுது தன வரவு திருப்திகரமாக இருக்கும். வளைகாப்பு, சீமந்தம், திருமணம் போன்ற சுபநிகழ்வுகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். பொதுவாழ்வில் இருப்பவர்கள், இழந்த பதவியை மீண்டும் பெறுவர். ஓகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். அங்கு நீச்சம் பெறுவதால் உறவினர்களிடம் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். கவனம் தேவை.




### கடக புதன் சஞ்சாரம்

ஜூலை 19 ஆம் திகதி, உங்கள் இராசிக்கு புதன் வருகிறார். 3, 12 இற்கு அதிபதியான புதனால், சகோதரர்கள் மூலம் அனுகூலம் கிடைக்கும். பயணங்கள் பலன் தரும் விதம் அமையும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், விருப்ப ஓய்வு பெற்றுக்கொண்டு சுயதொழில் செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்பு மாறும்.

### சிம்ம செவ்வாய் சஞ்சாரம்

ஜூலை 21 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இக்காலத்தில் எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகம் செவ்வாய் என்பதால், அது தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணையலாம். வீட்டுப் பராமரிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றத்திற்கு வழிபிறக்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய மாதம் இது. உடல்நலத்தில் கவனம் தேவை. ஊர் மாற்றம், இடமாற்றங்கள் உறுதியாகலாம். கணவன் - மனைவி இருவரும் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். 'புதிய உத்தியோகத்திற்கு மாறலாமா?' என்று சிந்திப்பீர்கள். கார்த்திகை விரதம் காரிய வெற்றி தரும்.

## தொழில் முன்னேற்றமும் காரிய வெற்றியும் கைகூடும்!

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

டுள்ளது.

இதன் அடிப்படையில் இதுவரையில் இலங்கையில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3 ஆயிரத்து 661 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் ஆண்கள் 29 பேரும் பெண்கள் 21 பேரும் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## முல்லை புளியங்...

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட புளியங்குளம் பகுதியில் நேற்று முற்பகல் இவ்விபத்து இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த நிலோஜன் (வயது-23) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

ஒட்டுசுட்டானிலிருந்து மற்றொருவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு முல்லைத்தீவு நோக்கிப் பயணித்தபோதே இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.

வீதியின் குறுக்காக சடுதியாகப் பயணித்த எருமை மாட்டுடன் மோதியே விபத்து நிகழ்ந்துள்ளதாக தெரிய வருகிறது. (ம-281)

## பளையில்...

இதில் முச்சக்கரவண்டியில் பயணித்தவர் விபத்துக்குள்ளான நிலையில் பளை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்கு அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று அதிகாலை குருநாகலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி முச்சக்கர வண்டியில் 4 பேர் பயணித்துள்ளனர்.

இதன்போது வீதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரஊர்தியின் மீது முச்சக்கரவண்டி மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் குருநாகல் பகுதியைச் சேர்ந்த நிலாந்த கோசல (வயது-20) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-100,316)

## யாழ்ப்பாணத்தில்...

பெற்றுவந்த சுழிபுரத்தைச் சேர்ந்த் 33 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை ஒரு மணிக்கு உயிரிழந்துள்ளார்.

அத்துடன் நேற்றிரவு 8 மணிக்கு சுழிபுரத்தைச் சேர்ந்த 72 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

இருவரும் கோவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளனர். (ம-33)

## +1,447...

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி, இந்நாட்டு மொத்த கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 280, 506 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம)

## இலங்கை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் வீட்டில் நேற்று வியாழக்கிழமை காலை இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்த விடயம் குறித்து கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இன்று (நேற்று) காலை இலங் கைக்கான அமெரிக்க தூதுவரும் வேறு அலுவலர்களும் சம்பந்தனின் இல்லத்தில் சந்தித்து உரையாடினார்கள்.

தமிழ்த் தேசிய பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக இலங்கை தமக்கும் வழங்கியிருக்கும் வாக்குறுதிகளின் அடிப்படையில் செயலாற்ற வேண்டும் என்பதை தாம் தொடர்ந்து வலியுறுத்துவதாக உறுதியளித்தார்" எனத் தெரிவித்துள்ளார். (ம)

## யாழில் இன்று...

ஸ்டாலின் உள்ளிட்டோரின் சட்டவிரோத கைது, கல்வியில் இராணுவ மயமாக்கல் மற்றும் கல்வியைத் தனியார் மயப்படுத்தல் ஆகியவற்றுக்கு எதிராக இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.நகரில் அமைந்துள்ள பிரதான பஸ் தரிப்பிட நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை இலங்கை ஆசிரியர் சங்கம் நடத்தவுள்ளது.

அரசின் அடக்குமுறை மற்றும் சர்வாதிகார போக்குக்கு எதிரான இப்போராட்டத்துக்கு ஆர்வமுடைய அனைவரும் கலந்துகொண்டு போராட்டத்துக்கு வலுச் சேர்க்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-18)

## பருத்தித்துறை...

அதன்படி மருந்தகங்கள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட வேண்டும் என்று சுகாதாரத் துறையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கிகள் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் திறக்க முடியும். பருத்தித்துறை நகரில் இருந்த பேருந்து தரிப்பிடம் மூடப்பட்டுள்ளதால் டிப்போ சந்தியிலிருந்து பேருந்துகள் சேவையில் ஈடுபடும்.

இந்த கட்டுப்பாடுகள் உடன் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சந்தை வியாபாரிகள் மூவருக்கு தொற்று உள்ளமை நேற்று அன்டிஜன் பரிசோதனையில் தெரிய வந்தது. அதனையடுத்து சந்தை முடக்கப்பட்டது.

பருத்தித்துறை பெருநகர், 401 கிராம அலுவலர் பகுதிகளில் கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளன.

பருத்தித்துறை 3ஆம் குறுக்குத் தெரு, தும்பளை வீதி, பத்திரகாளி வீதி, வீ.எம் வீதி, கடற்கரை வீதி, கொட்டடி வீதி அனைத்திலிருந்தும் நகருக்குள் உள்நுழைய முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-60)

# கோழிப்பண்ணை மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

## வயாவிளானில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கோழிப்பண்ணை மீது இனந்தெரியாதோர் புகுந்து தாக்குதல் நடத்தியதில் அங்கிருந்த பெறுமதியான பொருட்கள் நாசமாகியுள்ளன.



இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று வியாழக்கிழமை அதிகாலை வேளை குட்டியப்புலம் வயாவிளானில் உள்ள கோழிப்பண்ணை ஒன்று இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு, அங்கிருந்த பொருட்களும் அடித்து சேதப்படுத்தப்பட்டது.

இது தொடர்பில் பண்ணை உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம)

## 'டெல்டா'...

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கொழும்பு, பிலியந்தல உட்பட்ட பகுதிகளில் 19 பேருக்கு குறித்த வகை வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையில் இதுவரையில் குறித்த வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தமிழ் மக்களுக்...

இதன்போது, இலங்கை அரசாங்கம் சர்வதேசத்துக்கும் தங்களுக்கும் வழங்கிய உறுதிமொழிகளை புறக்கணித்து பயணிப்பதை அவதானிக்கக்கூடியதாக இருப்பதாக அமெரிக்கத் தூதுவர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் தெரிவித்தார்.

இதுவரையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் விடயங்களை முன்னிலைப்படுத்தி செயற்பட்டுவந்த நிலையில், எதிர்காலத்தில் அரசியல் தீர்வு விடயத்தையும் முதன்மைப்படுத்த எண்ணி இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் அமெரிக்காவின் தூதுவர் அலைனா பி. டெப்லிட்ஸ் உடன், அமெரிக்க தூதரகத்தின் அரசியல்துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர். (ம)

## 40 பேருக்கு...

வல்வெட்டித்துறை வடமேற்கு கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 209 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் நேற்று 40 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் மூன்று நாட்களில் 88 பேருக்கு கோவிட்-19 நோய்த்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-33)


தன நிதானய
திகதி - 2021.07.15
சீட்டிழுப்பு இலக்கம் - 536
B 40 47 51 82

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 15.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2801
U 32 36 67 71

மஹஜன சம்பத
திகதி 2021/07/15
சீட்டிழுப்பு இலக்கம் 4506
F 0 5 3 6 1 9

மெகா பவர்
திகதி 15/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0854
H 26 18 35 46 66

அத கோடிபதி
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1309
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 15.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,131,474
வெற்றி இலக்கங்கள்
11 13 30 43 P

சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3644
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 15.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 43,305,506
வெற்றி இலக்கங்கள்
11 19 37 47 N

ராசி
சுப்பர் ஜக்பொட் 4,681,446/=
திகதி: 15.07.2021
வெற்றி வாரம்: 3195
வர்ணம்: மண் நிறம்
வெற்றி இலக்கங்கள் 23 26 47 57 மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,741,900/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1483
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 15/07/2021
தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
V 38 47 50 71
அடுத்த சுப்பர் ஜக்பொட 58,705,991/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

கொழும்பு தெகிவளையில் உள்ள ஒரு வைத்தியரின் வீட்டில் வேலை செய்வதற்கு 20 - 40 வயதுடைய துப்புரவான, நேர்மையான பணிப்பெண் ஒருவர் வேண்டும். (7234)

077 217 7995 Dr. Deva
076 764 6888

## காணி விற்பனை

யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தில் முதலாம் ஒழுங்கையில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு.
( 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)
1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும்
( யாழ். - மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரத்தில்)
தொடர்பு நேரம் : 9.30 a.m - 5.00 p.m (C-2361)

076 221 2037, 076 734 1023, 077 064 2661

## புனித சூசையப்பர் சர்வதேச திருமண சேவை

கிறிஸ்தவ, இந்து சமயடிக்களின் திருமண இணைப்பாளர்
பதிவு இல. DS/VN/PR/112

புனித கயித்தார் கோவில் வீதி, மாரீசன் கூடல், (இளவாலை) நீண்டகால இடைவெளிக்குப்பின் எமது சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. நேரடியான பதிவுகள் மட்டுமே சேவைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

தொடர்புகொண்டு வரவும் (7333)

070 310 7250, 077 967 2462


# மரண அறிவித்தல்



## திருமதி அரியமலர் நவரட்ணம்

பிறப்பு 1935.02.25 இறப்பு 2021.07.15

தெல்லிப்பழையைப் பிறப்பிட மாகவும் கோவில் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியமலர் நவரட்ணம் நேற்று (15.07.2021) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணத்தின் அன்பு மனைவியும் கமலாதரன் (UK), பாலசிங்கம், அமிர்தகௌரி, கமலவாசன் (Canada), கமலதாசன் (UK), கேதாரகௌரி, கமலசிறி (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயகௌரி (UK), கமலினி, திருநாவுக்கரசு, கோமதி (Canada), தாரா (UK), வேலுப்பிள்ளை, சுஜிதா (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.07.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (7240)

கோவில் வீதி,
நல்லூர்.

தகவல்:-
குடும்பத்தினர்


## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (7235)

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

60 நாட்களான ஒறிஜினல் ஜேர்மன் சர்ப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு.
இடம் : கிளிநொச்சி (C-2357)

077 190 3165

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-2308)

0768226240 DHL

## Physics (English Medium)

Group Classes
A/L 2023 batch
Mechanics starts
on 17/07/2021 - Saturday
Now, On Zoom
By : M.Jeya (B.Sc, PGED) (7221)

076 294 3565
No: 209, Palaly Road, Kondavil East, Kondavil

## கனடா-STUDENT VISA

A/L எடுத்த மாணவர்கள் குறைந்த செலவில் கனடாவில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் வீசா ஏற்பாடுகள். (C-2351)

IELTS இலவசமாக கற்பிக்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)

VISA APPLICATION

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

0777-068-777

## அண்ணா EXPRESS

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள் (C-2307)
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)


# மரண அறிவித்தல்



## யோகலட்சுமி முருகேசு

( ஓய்வுபெற்ற ஆசிரியை - நாவலர் பாடசாலை )

மலர்வு : 25.02.1943 உதிர்வு : 12.07.2021

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட யோகலட்சுமி முருகேசு கடந்த (12.07.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா வேலுப்பிள்ளை (செல்லப்பா ஸ்ரோஸ் - காரைநகர்) - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகேசுவின் (ஓய்வுபெற்ற திறைசேரி உதவிப் பணிப்பாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆனந்தராசா (கனடா), நாகலட்சுமி (கனடா), மங்கையற்கரசி (கனடா), காலஞ்சென்ற திருநாவுக்கரசு (கனடா), திலகவதி (கனடா), காலஞ்சென்ற ராஜலட்சுமி (வவுனியா), கதிர்காமநாதன் (கனடா), காலஞ்சென்ற நவரட்ணராசா (லண்டன்), தேவகி (லண்டன்), சிற்சபேசன் (காரைநகர்), சந்திரவதனா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலமுரளி (லண்டன்), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லதா (லண்டன்), சத்தியரூபி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஸ்ணா (லண்டன்), விதுஷன் (லண்டன்), சரிகா (கனடா), சாரா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 7.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (7232)

19/1, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பாலமுரளி (மகன்) 076 947 6297
பிரபாகரன் (மகன்)
சிற்சபேசன் (சகோதரன்) 076 636 9256

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.